# நம் வழி வேளாண்மை

பருவம் 27 ஜூலை – செப்டம்பர் 2017 இதழ் 2



பாரம்பரிய கால்நடை இனப் பாதுகாவலர்களுக்கு பரிசு – 2017
நாள் : 22.5.2017 இடம் : கர்னால், ஹரியானா.

## *இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம்வழி வேளாண்மை

பருவம் 27 ஜூலை – செப்டம்பர் 2017 இதழ் 2

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.


**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே



**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com



**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org


## எப்பொழுதும் ஆனந்தம்

புத்தரின் தலைமை மடாலயத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவம் அடிப்படை சந்நியாஸப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த சந்நியாஸிகள், தியானத்தை மக்களுக்குக் கற்றுத்தந்து. மக்கள் முன்னேற்றம் பெறுவதற்காக நாடு முழுவதும் சேவைக்காக புறப்படும் நேரம் வந்தது. அதில் பூர்ணகாஷ்யபா எனும் சந்நியாஸிக்கு மட்டும் எங்கு செல்வது என்று சொல்லப்படவில்லை. பூர்ணகாஷ்யபா நேரடியாய் புத்தரிடமே சென்று கேட்டார். ''நான் எங்கு செல்லட்டும்?'' புத்தர் சிரித்தபடி சொன்னார். ''நீயே தேர்வு செய்யப்பா'' இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு தான் செல்ல விரும்புவதாக சொன்னார். சீடனைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டவராய் புத்தர் கேட்டார். ''அந்தப் பகுதிக்கா? அங்கே வாழும் மனிதர்கள் மிகவும் முரடர்கள் சின்ன சின்ன பிரச்னைக்கெல்லாம் அடிதடி சண்டையில் இறங்குபவர்கள். கொஞ்சம் கூட பக்தியோ, தியான உணர்வோ இல்லாதவர்கள். இப்படி பொல்லாதவர்களிடமா போக விரும்புகிறாய்?''

''ஆமாம்'' என்று தைரியத்தோடு சொன்ன சீடனிடம் புத்தர் சொன்னார். ''உன்னிடம் மூன்று கேள்விகளை கேட்க விரும்புகின்றேன். இந்த மூன்று கேள்விக்கும் சரியான பதில் சொல்லிவிட்டால் நீ போகலாம்'', ''முதல் கேள்வி அங்கே சென்ற பிறகு உன்னை வரவேற்பதற்கு பதில் அவமானப்படுத்தினால் என்ன செய்வாய்?.

''ரொம்ப ஆனந்தப்படுவேன். ஏனென்றால், அவர்கள் என்னை அடிக்கவில்லை, உதைக்கவில்லை, திட்டுவதோடு நிறுத்திக் கொண்டார்களே, மிகவும் நல்லவர்கள் .... என்று நன்றி சொல்வேன்'' ''இரண்டாவது கேள்வி ஒரு வேளை திட்டாமல் அடித்து உதைத்தால் என்ன செய்வாய்?''

''அவர்கள் மிகவும் நல்லவர்கள் அதனால் தான் என்னைக் கொல்லாமல் விட்டு விட்டார்கள் வெறுமனே அடித்ததோடு நிறுத்திக் கொண்டார்களே என ஆனந்தப்படுவேன்.''

''மூன்றாவது கேள்வி ஒரு வேளை உன்னைக் கொன்று விட்டால் என்ன செய்வாய்? ''ஆஹா இன்னும் ஆனந்தப்படுவேன் மொத்தமாக இந்த வாழ்க்கையில் இருந்தே எனக்கு சுதந்திரம் தந்து விட்டார்கள் இனி எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை என்று மிகவும் ஆனந்தப்படுவேன்'' என்று சொன்னதும்.

''நன்றாக தேறிவிட்டாய்; அங்கு மட்டுமல்ல எங்கு சென்றாலும் நீ வாழ்ந்து விடுவாய் எதனாலும் இனி உன்னை வீழ்த்தமுடியாது. எப்போதும் ஆனந்தமாயிருக்க பக்குவப்பட்டுவிட்டாய்; எங்கு சென்றாலும் நல்லாயிருப்பாயப்பா போய் வா'' என ஆசீர்வதித்தார்.

– இணையதளத்திலிருந்து ஜென் கதைகள்

## நீரின்றி அமையாது உலகு

சென்ற வருடம் ஏற்பட்ட வறட்சியால் பல இடங்களில் நெல் சாகுபடி செய்ய முடியவில்லை. மானாவரி விவசாயத்தில் முழு மகசூல் இல்லை. காய்க்கும் தென்னை மரங்கள் பல ஊர்களில் கணிசமான அளவு பட்டு விட்டன. இதனால் தற்சமயம் தேங்காயின் விலையும் கூடி விட்டது. வேளாண்மை பாதித்ததால் அதைச் சார்ந்த தொழில்கள் மொத்தமும் கஷ்டமான சூழலுக்கு தள்ளப்பட்டது. தற்பொழுது தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை கைகொடுத்து காப்பாற்றிவிட்டது. இதுவும் பொய்த்திருந்தால் நினைத்துப்பார்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்போம்.

மழை பொழியும் காலம், மழை அளவும் முன்கூட்டியே கணிக்கப்பட தொழில்நுட்பம் உள்ளது. அதே சமயம் மழைப்பொய்ப்பதைத் தடுக்க அறிவியலுக்குட்பட்ட சக்தி நம்மிடம் இல்லை. கோள்களின் நிலைப்பாடு பெய்யும் மழையை நிர்ணயம் செய்யும் போன்ற வானியல் கூற்றுக்கள்/ பஞ்சாங்க முறைகளை ஆராய முற்பட்டால் மேலும் பல உண்மைகள் கிடைக்கும். சுற்றுச்சூழல் மாசு அடைவதைத் தடுக்கவும், பசுமை சூழல் உருவாக மரங்கள் நட்டு பூமியை குளிர்விப்பதும் மழை வர சிறந்த அணுகுமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன் அறவழி அதாவது எவ்வழி நல்வழி அவ்வழி நம் வழி என்ற உறுதியுடன் நாம் செல்ல முற்பட்டால் பெய்யென பெய்யும் மழை என்ற வள்ளுவர் வாக்கையும் உற்று நோக்கலாம். (கடன் வாங்கி மழை பொழிதல் – 23ம் பக்கம் )

– ஆசிரியர்

## நீர் தொட்டிகளில் நீரின் அளவை கட்டுப்படுத்தும் தானியங்கி சுவிட்ச்

**(வாட்டர் கன்ட்ரோல் சுவிட்ச்)**




ஈரோடு மாவட்டம் சேர்வகாரன்பாளையம் செந்தில் தெருவிளக்கு தானியங்கி கருவியை உருவாக்கியுள்ளார். இவர் நீரேற்றும் தொட்டிகளில் நீர் நிரம்பியவுடன் தானாக நின்றுவிடும் மோட்டார் சுவிட்ச் வடிவமைத்துள்ளார். தண்ணீர் தொட்டி நிறைந்தவுடன் தானாகவே மோட்டாரின் இயக்கத்தை நிறுத்திவிடும். நிலத்தொட்டியில் நீர் இல்லாமல் இருந்தால் வெறும் மோட்டார் ஓடாது. தண்ணீர் டேங்கில் நீரின் அளவு குறைந்தால் தானாகவே மின் மோட்டாரை இயக்கும் மற்றும் அணைக்கும்.அதிக மின்னழுத்தம் மற்றும் குறைந்த மின்னழுத்தம் ஏற்படும் போது பம்புசெட்டை பாதுகாக்கும். இதன் மூலம் மின்சாரம் மற்றும் தண்ணீர் வீணாவதைத் தடுக்கலாம். மேலும் பம்புசெட்டின் ஆயுள் காலம் அதிகரிக்கும். இவர் உருவாக்கியுள்ள மாடல்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தண்ணீர் டேங்க் நிரம்பினால் தானாக மோட்டாரை நிறுத்தும் மற்றும் நீர் குறைந்தால் தானாக மோட்டாரை இயக்கும் கருவி – ஒரு வருடம் உத்திரவாதம் (பொருத்துதல் செலவுடன் – ரூ. 25,000).
2. தண்ணீர் டேங்க் நிரம்பியவுடன் ஹாரன் மட்டும் ஒலிக்கும் கருவி – ஒரு வருடம் உத்திரவாதம் (பொருத்துதல் செலவுடன் – ரூ. 1000).
3. தண்ணீர் டேங்க் நிறைந்தால் ஹாரன் ஒலிக்கும் தானாக மின் மோட்டாரை நிறுத்தும். 3 நிமிடத்தில் இருந்து 1 மணி நேரம் வரை ஆன் ஆப் அளவிடும் கருவி – இரண்டு வருடம் உத்திரவாதம் பொருத்துதல் செலவுடன் – ரூ. 2,500
4. நில அளவு தண்ணீர் தொட்டியில் நீர் இல்லாமல் வெறும் பம்ப் இயங்குவதை தடுக்கும் மற்றும் மேல் டேங்கில் நீர் நிறைந்தவுடன் தானாகவே மோட்டரை நிறுத்தும். ஒரு வருடம் உத்திரவாதம் (பொருத்துதல் செலவுடன் – ரூ. 3000).

ஜீஎஸ்எம் செல்போன் ஸ்டார்டர் மற்றும் சொட்டு நீர் பாசனத்திற்கு டைமர் கருவிகள் குறைந்த விலையில் செய்து தருகிறார். மேலும் நடைமுறையிலுள்ள அன்றாட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொழில்நுட்பம் கொண்ட கருவிகள் வடிவமைத்துத் தருகிறார். உடனடியாக பொருத்துதல் மற்றும் சர்வீஸ் செய்து தருகிறார்.

செந்தில்
3/99, சேர்வகாரன்பாளையம்
விஜயமங்கலம் – 638 056
பெருந்துறை தாலுகா
ஈரோடு மாவட்டம்
செல் : 9600818182, 9488988182

## வறட்சியை சமாளிக்க எலுமிச்சையில் புதிய ஒட்டுமுறை



வறட்சியிலும் எந்த பொட்டல் தரையிலும் களிமண் பூமியிலும் நன்றாக வளரும் மரம் விளாமரமாகும். இந்த மரத்திலிருந்து விளாம்பழம் கிடைக்கும். இந்த மரத்தின் வேர் பகுதியையும் நன்கு காய்க்கும் எலுமிச்சை மரத்தின் தண்டுப்பகுதியையும் சேர்த்து சொருகு ஒட்டு முறையில் ஒட்டுக்கட்டி பார்த்ததில் எலுமிச்சை தற்சமயம் துளிர்விட்டு 33 நாட்கள் மேல் ஆகிறது. இதனை 50 கன்றுகளில் ஒட்டுகட்டி பார்த்ததில் 35 கன்றுகள் துளிர்விட்டு விட்டன. எலுமிச்சை சுமார் 20 வருடங்கள் காய்த்து பலன் தரும். ஆனால் விளாமரம் சுமார் 100 வருடங்களுக்கு மேலும் படாமல் காய்க்கும் தன்மை கொண்டது. இந்த புதிய ஒட்டு கன்று நடவு செய்யப்பட்டு ஆராயப்படும். இந்த ஆராய்ச்சி வெற்றிபெற்றால் எலுமிச்சையை மானாவரி பயிராக சாகுபடி செய்து வறட்சியிலும் மகசூல் அளிக்கும் தன்மை உடையதாக மாற்றலாம். இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட இராஜபாளையம் ஜெகந்நாதராஜா கடந்த சில ஆண்டுகளில் வருடம் முழுவதும் காய்க்கும் விளாம்பழ மரத்தையும், விதையில்லா விளாம்பழ மரக்கன்றுகளையும் ஒட்டுக்கட்டி 200 கன்றுகளுக்கு மேல் விவசாயிகளுக்கு கொடுத்துள்ளார்.

திரு. ஜெகந்நாதராஜா
இராஜபாளையம் நர்சரி காடன்
168, மதுரை ரோடு
இராஜபாளையம் – 626117
தொலைபேசி: 9442057077,9842122866

## சின்னப்பனையின் மூலிகைவைத்யம்



மதுரை மாவட்டம் பாலமேடு இச்சிக்குளத்தில் சின்னப்பனை (வயது 55) 5 ம் வகுப்பு வரை படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறார். இவரிடம் 15 வெள்ளாடுகள் உள்ளன. இது தவிர பாரம்பரியமாக மூலிகை வைத்யமும் செய்து வருகிறார். மூலிகை வைத்தியத்திற்கு தேவையான மூலிகைச்செடிகளையும் தேவைப்படுவோர்க்கு சேகரித்து தருவிக்கிறார். பாலமேடு பகுதி சிறுமலை அடிவாரத்தில் அமைந்துள்ளதால் இங்குள்ள வனங்களில் மூலிகை செடிகள் பரவலாகக் காணப்படுகின்றன. இச்சிக்குளத்திலுள்ள 5 குடும்பங்கள் மூலிகை செடிகள் சேகரிப்பதையே பிரதானமாகக் கொண்டுள்ளனர். இவர் கடைபிடிக்கும் வைத்யமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர் வர்மக்கலையையும் கற்றுள்ளார். நோய் பார்க்கும் முன்னர் நாடி பார்த்து வாதம், பித்தம் கபம் போன்றவற்றை நிர்ணயத்து வைத்ய முறைகளைக் கூறுகிறார்.

**சர்க்கரை சத்துக்கு**

சிறுகுறுஞ்சான், ஆவாரம், தாண்றிக்காய், கடுக்காய், சதகுப்பை, சங்குஇலை, நெல்லி, அருகம்புல், சீரகம் ஒவ்வொன்றும் சம பங்கு எடுத்து காய வைத்து தூளாக்கி மாத்திரை குப்பியில் அடைத்து சாப்பிட வேண்டும். சாப்பிடும் சமயம் ஆட்டுக்கறி, கருவாடு, கருணைக்கிழங்கு, வேர்க்கடலை சாப்பிட கூடாது.

**கை, கால், விளாங்காமலிருந்தால், மூட்டு வலிக்கு**

கொடுவிலா, கொல்லங்கோவை கிழங்கு, சங்குவேர், மூக்கரட்டை, அழிஞ்சிபட்டை, ஆவிபட்டை, வாவரக்காச்சி, குப்பைமேனி, புரசம்பட்டை, ஆதண்டை, காதட்டி, இவைகளை பச்சையாக 5 கிலோ எடுத்து 50 லிட்டர் நீரில் கொதிக்க விட வேண்டும். பின்னர் 2 நாட்கள் அனலிலே வைத்து விட வேண்டும். இது நன்றாக சுண்டி விட வேண்டும். இந்த கசாயத்துடன் 5 லிட்டர் எண்ணெய் (வேப்பஎண்ணெய், புங்க எண்ணெய்,

விளக்கெண்ணெய், கடலை எண்ணெய் இலுப்பை எண்ணெய்) சேர்த்து காய்ச்ச வேண்டும். இத்துடன் சுக்கு, வெள்ளைமிளகு, திப்பிலி, அதிமதுரகொட்டை, அரிசிதிப்பிலி, கருஞ்சீரகம் அனைத்தையும் பொடி செய்து கிண்ட வேண்டும். இது எண்ணெய் பதத்துடன் வந்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கி வைத்து விட வேண்டும். இந்த எண்ணெய்யை நித்தமும் 2 வேளை வெளிபூச்சாக பூசி வர வேண்டும்.

**மூலத்திற்கு**

துத்தியிலை, நாயுருவி, தை வேளை, சின்னவெங்காயம், சீரகம் சேர்த்து இடித்து சுடு தண்ணீரில் கலந்து வெறும் வயிற்றில் 3 நாட்கள் சாப்பிட வேண்டும்.

**டெங்கு காய்ச்சலுக்கு**

மலைவேம்பு இலை, பப்பாளி இலை, சீரகம், வேக வைத்து கசாயம் சாப்பிட வேண்டும்.

**வெள்ளாடு இளங்கொடி விழாமிருந்தால்**

ஓமவள்ளியிலையை தட்டி புளிச்ச தண்ணீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**ஆட்டிற்கு கண்ணீல் பூ விழுந்தால்**

மாந்தி கொட்டையால் பூ தட்டி சாறு எடுத்து 2 சொட்டு கண்ணில் ஊற்ற வேண்டும்.

**மாட்டிற்கு காணை நோய் வந்தால்**

மாடுகள் உள்ள தொழுவில் கச்சைகருவாடு நீரை தெளிக்க வேண்டும். மாடுகளை சேற்றில் மிதித்து நடக்க விட வேண்டும்.

**மடிநோய்க்கு**

வெள்ளருகு அவித்து (இட்லி அவிப்பது போன்று) மடி பகுதியில் ஒத்தடம் தர வேண்டும்.

**சிறு பாம்பு கடிக்கு / குடற்புழுக்களுக்கு**

சிறுகுமட்டி வேர், தலைசுருளி, கொல்லங்கோவை கிழங்கு சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும்.

**மாட்டிற்கு பால் கூட**

மனமுருகி இலையை தட்டி பாலில் கலந்து தர வேண்டும்.

**சப்பை நோய்க்கு**

பேய்பீர்க்கு சமூலம், உப்பு சேர்த்து பசை போன்று அரைக்க வேண்டும். பின் நார்த்தங்காயை இரண்டாக அறுத்து பசையில் தடவி சப்பையில் தேய்த்து விட வேண்டும். உள் மருந்தாக முருங்கை இலை, சிறுகுறுஞ்சான் இலை, நன்னாரி இலை ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து அரைத்து கொட்டத்தில் 2 வேளை ஊற்ற வேண்டும்.

**ஆடு கழிச்சலுக்கு**

விடத்தழை, சீரகம் சேர்த்து அரைத்து புளிச்ச தண்ணீரில் கலந்து உள்ளே ஊற்ற வேண்டும். மாதுளம்பிஞ்சு அரைத்தும் கொடுக்கலாம்.

**ஆட்டு வாய் புண்ணுக்கு**

சுண்டக்காய் இலைகளை, அரைத்து பூச வேண்டும்.

**ஆடு "கொர்.... கொர்" என்று தும்மினால்**

சாம்பிரணி புகை காட்ட வேண்டும்.

**குந்து நோய்க்கு**

குந்து நோய் கண்ட மாடுகள் கால் நடுங்கி கொண்டிருக்கும். நடக்க முடியாது. இதற்கு பேய்ப்பீர்க்கு சமூலம் அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**துல்லுமுறி வந்தால்**

இதற்கு 3 நாள் காய்ச்சல் என்று கூறுவர். இந்நோய் வந்த மாட்டிற்கு குண்டு முத்து தழையை கழுத்தை சுற்றி கட்ட வேண்டும். முறத்தில் சாம்பல் எடுத்து 3 பெண் பிள்ளைகளை வரவழைத்து மாட்டை சுற்றி பிடைக்க வேண்டும்.

சின்னப்பனை
இச்சிகுளம், சத்திர வெள்ளாளபட்டி அஞ்சல்
பாலமேடு வழி, மதுரை மாவட்டம்
செல் : 9751491213, 8760695052

**வேளாண்மை தோன்றி எத்தனை வருடங்கள் ஆகிறது**

சூரியனிலிருந்து பூமி வந்தது – 460 கோடி வருடங்கள், பூமியிலிருந்து சந்திரன் தோன்றியது – 450 கோடி வருடங்கள், பூமியில் பாறை தோன்றியது – 440 கோடி வருடங்கள், பூமியில் பிராணவாயு உற்பத்தியானது– 240 கோடி வருடங்கள், முதல் பிராணி தோன்றியது 60 கோடி வருடங்கள். முதல் முதுகெலும்புள்ள பிராணி தோன்றியது – 53 கோடி வருடங்கள், முதல் தாவரம் தோன்றியது – 47 கோடி வருடங்கள், முதல் டைனோசர் தோன்றியது – 23 கோடி வருடங்கள், முதல் புல் தோன்றியது – 6.5 கோடி வருடங்கள், இந்திய பாறைகள் உராய்வு –4.5 கோடி வருடங்கள், இமயமலை தோன்றியது –2.2 கோடி வருடங்கள், முதல் மனிதன் தோன்றியது – 1,95,000 வருடங்கள், வேளாண்மை தொடங்கியது – 11,000 வருடங்கள்.

பூமியின் ஆழம் – 6372 கி.மீ, பூமியில் இதுவரை போடப்பட்ட ஆழ்குழியின் ஆழம் – 12 கி.மீ. வரை.

சென்னையில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சி, அக்டோபர் 13–16, 2017ல் தொகுத்தது.

பெ.விவேகானந்தன், சேவா, மதுரை

## இல்லறத்தில் நல்லறம் – இயற்கை வேளாண்மை



பிச்சைமுருகன் (48) பி.ஏ வரை படித்து விட்டு விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் அச்சன்குளத்தில் விவசாய பண்ணை வைத்துள்ளார். இவரிடம் 15 பசு மாடுகளும் கன்றுகளும் உள்ளன. இவர் சுமார் 20 ஏக்கர் நிலத்தில் தீவன புல், வாழை, கடலை, மரவள்ளிக்கிழங்கு, நெல் சாகுபடி செய்து வருகிறார். இவர் கடந்த 8 ஆண்டுகளாக இயற்கை முறையில் வேளாண்மை செய்து வருகிறார். இதற்கு உறுதுணையாக பொறியியல் பட்டதாரியான இவருடைய துணைவியாரும் செயல்படுகிறார்.

### கிணற்றில் ஊற்று உண்டாக

இவருடைய நிலம் கன்மாய்க்கருகே அமைந்துள்ளது. கண்மாயில் மழை காலத்தில் நீர் நிரம்பினாலும் கிணற்றில் ஊற்று சரியாக ஊறுவதில்லை. கிணற்றில் நீர் ஊற்று நன்கு எடுக்க கீழ்க்கண்ட முறையை கையாண்டு பார்த்தார். கண்மாயிலிருந்து ஓடை வழியாக வரும் தண்ணீரை வாய்க்கால் கொண்டு கிணற்றில் நேரடியாக உள்ளே விட்டார். கிணற்றை நிரப்பினார். இதனால் கிணற்றை சுற்றியுள்ள பூமி குளிர்ந்து விடுகிறது. இதன் பின்னர் கண்மாயில் சிறிதளவு தண்ணீர் வந்து விட்டாலும் கிணற்றில் ஊற்று எடுத்து நீர் ஊறி விடுகிறது. அதாவது கிணற்றின் நீர் மட்டம் விரைவாக உயர்ந்து விடும். ஒரு முறை மட்டும் கிணற்றிற்கு கண்மாய் தண்ணீரை உள்ளே விட்டால் போதும். பின்னர் கிணற்றில் தானாக ஊற்று எடுக்கும்.

### இயற்கை உரத்தை ஆளில்லாமல் இடும் முறை



இன்று விவசாயத்திற்கு ஆள் கிடைப்பது சிரமமாகஉள்ளது. மாட்டு கொட்டகையிலிருந்து வழிந்து வரும் சாணம் கலந்த சீறுநீர் ஒரு குழியில் (5X5X5 அடி) சேகரிக்கப்படுகிறது. இதற்கு ஏதுவாக சரிவு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த குழியில் எருக்களை கொளுஞ்சி, ஆடாதொடை, வேப்பிலை போன்றவைகள் போடப்படுகின்றன. இவை சில நாட்களில் ஊறி புளித்து விடும். நிலத்திற்கு பாய்ச்சப்படும் வாய்க்கால் நீர் இந்த குழியில் விழுந்து செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வயலுக்கு தேவையான உரம் வாய்க்கால் நீர் மூலம் பயிரை அடைகிறது. இதில் வளரும் பயிர்கள் இரசாயன உரமில்லாமலேயே செழித்து வளரும். பூச்சி, நோய் தாக்குதல் அவ்வளவாக இருக்காது.

### அமாவாசையில் பஞ்சகவ்யா தயார் செய்தல்

அமாவாசைக்கு முதல் நாள் சாணம், நெய் சேகரித்து வைத்து கொள்ள வேண்டும். அமாவாசை அன்று 5 கிலோ சாணத்துடன் 1 கிலோ நெய் சேர்த்து பிசைந்து வைத்து விட வேண்டும். 3 நாட்கள் கழித்து இத்துடன் பால் 3 லிட்டர், தயிர் 3 லிட்டர், மாட்டு கோமியம் 3 லிட்டர், கரும்புசாறு 3 லிட்டர் அல்லது வெல்லம் 1 கிலோ சேர்த்து கலக்க வேண்டும். இதில் தேவைப்பட்டால் வாழைப்பழம், இளநீர் சேர்த்து கொள்ளலாம். 2 வாரங்களில் நன்கு புளித்து விடும். இதனை 2 நாட்களுக்கு ஒரு முறை கலக்கிவிட வேண்டும். இதிலிருந்து 200 மி.லி கரைசல் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு மேல் உரமாக தெளிக்கலாம்.

### முட்டை வெங்காய கரைசல்

15 நாட்டுக்கோழி முட்டை வெள்ளைகரு எடுத்து வெங்காயம் 1 கிலோ அரைத்து கலந்து 200 லிட்டர் நீர் சேர்த்து ஓர் ஏக்கர் பயிருக்கு தெளிக்கலாம். இதனால் பயிர் வளர்ச்சி கூடும். பயிரில் மஞ்சள் நிறம் தென்பட்டால் பச்சையாக மாறிவிடும்.

(கர்நாடக மாநிலம் ஹொலாலு என்ற ஊரில் மஞ்சுநாத் என்பவர் கீழ்க்கண்ட முறையில் இந்த கரைசலை தயார்

செய்து வளர்ச்சி ஊக்கியாக பயன்படுத்துகிறார். கோழி முட்டை 12, வெல்லம் 3 கிலோ அல்லது தேன் 2 கிலோ, வாழைப்பழம் 12, சின்ன வெங்காயம் 1 கிலோ. வெங்காயத்தை அரைத்து மற்ற பொருட்களுடன் பிசைந்து விட வேண்டும். இதனை பிளாஸ்டிக் அல்லது மண் பாத்திரத்தில் 3 நாட்கள் வைத்து விட வேண்டும். இதனை நித்தமும் இரு முறை கலக்கி விட வேண்டும். பின்னர் வடிகட்டி 200 லிட்டர் நீருடன் பயிருக்கு தெளிக்கலாம். முதல் தெளிப்பு பூ எடுக்கும் சமயம் செய்ய வேண்டும். 2வது தெளிப்பு மணி பிடிக்கும் சமயமும் 3 வது தெளிப்பு அறுவடைக்கு ஒரு மாதத்திற்கு முன்பும் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் 20 சதவீதம் மகசூல் கூடும். ஓர் ஏக்கருக்கு 3 முறை தெளிக்க ரூ. 2000–3600 வரை செலவாகும்).

**தேங்காய் மோர் கரைசல்**

10 லிட்டர் பாலில் உறை ஊற்றி தயிராக்க வேண்டும். தேவையான அளவு நீர் சேர்த்து மோராக மாற்ற வேண்டும். இதில் 5 தேங்காயை துருவி பால் எடுத்து சேர்க்க வேண்டும். இத்துடன் பால் பெருங்காயம் 50 கிராம் அரைத்து சேர்க்க வேண்டும். இந்த கரைசலை ஓர் ஏக்கர் பயிருக்கு நீருடன் கலந்து தெளிக்கலாம்.

**மீன் அமிலம்**

கழிவு மீன், வெல்லம் சம அளவு எடுத்து ஒரு சட்டியில் ஊற வைக்க வேண்டும். சில நாட்களில் மீனும் வெல்லமும் கரைந்து விடும். இதனை பயிருக்கு தெளிக்க கரும் பச்சை நிறத்தில் செழிப்பாக வளரும். மீன், வெல்லம் கரைசல் தயார் செய்யும் சமயம் பழைய மீன் அமில கரைசல் சிறிது சேர்த்தால் விரைவில் கரைசல் தயாராகி விடும்.

**நுண்ணுயிர் கலவை**

ஒரு லிட்டர் இ.எம். (Effective Microorganisms) கலவையுடன் 1 கிலோ வெல்லம், 20 லிட்டர் நீர் சேர்த்து 7 நாட்கள் ஒரு டிரம்மில் புளிக்க விட வேண்டும். டிரம்மின் வாய் பகுதியை மூடி விட வேண்டும். இதனை 2 நாட்களுக்கு ஒரு முறை திறந்து மூடி விட வேண்டும். ஒரு வாரத்தில் இந்த நுண்ணுயிர் பல மடங்கு பெருகி விடும். இதனை பயிருக்கு தெளிக்கலாம். அல்லது வாய்க்கால் தண்ணீரில் ஏக்கருக்கு 5 லிட்டர் கலந்து விடலாம். இதனால் பயிர் வளர்ச்சி கூடும். இந்த கலவையை மாட்டிற்கு 10 மி.லி தரலாம். கோழிக்கு அரிசியில் கலந்து கொடுக்கலாம். இதனை பயன்படுத்தும் இடத்தில் ஈ, கொசு தொல்லையிராது.

**மாடுகள் நீர் குடிக்க பிளாஸ்டிக் பேரல்**

நீலநிற பிளாஸ்டிக் டிரம்மை இரண்டாக அறுத்து வரிசையாக அமைத்து மாடுகள் நீர் குடிக்கவும். தீவனத் தொட்டியாகவும் பயன்படுத்தலாம். இதனால் செலவு குறைவு. கீழ்கண்ட படத்தில் இம்முறை காட்டப்பட்டுள்ளது. இதில் ஹோஸ் மூலம் நீரை நிரப்பமுடியும். மீதமுள்ள நீரை வெளியேற்றி விடலாம்.



பிச்சைமுருகன்
அச்சன்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம், செல் : 9362794206

## துவரையை சேமிப்பு கால பூச்சியிலிருந்து பாதுகாத்தல்

துவரை, பயறு போன்ற பயறு விதைகளை சேமித்து வைக்கும் சமயம் வண்டுகள் தாக்கி சேதாரத்தைத் தரும். இதற்கு இரசாயன மருந்துகளையே பல ஆண்டுகள் பயன்படுத்தி வந்துள்ளேன். இருப்பினும் சிறிதளவாவது பூச்சித் தொல்லை இருந்து வந்தது. கடந்த 2 வருடங்களாக தர்ப்பை புல்லை வெட்டி துண்டுகளாக்கி துவரை பயறுடன் சேர்த்து சேமித்து வைத்து வருகிறேன். இம்முறையில் எந்த பூச்சி, நோய் தாக்குதலில்லாமல் விதைகள் உள்ளன.

சுந்தர்ராஜன்
ய. புதுப்பட்டி
ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்
செல் : 9994071618

## சின்னத்தம்பியின் தேங்காய் சிரட்டை கைவினைப்பொருட்கள்



சின்னத்தம்பி (31) ஸ்ரீ வில்லிபுத்தூர் பூவானி கிராமத்தில் வசித்து வருகிறார். இவர் 7 ம் வகுப்பு வரை படித்து விட்டு விவசாயக் கூலியாகவும் விவசாயக் கருவிகளை ரிப்பேர் செய்பவராகவும் இருக்கிறார். இவர் 14 வருடங்கள் கேரளாவில் இருந்து விட்டு சொந்த ஊர் திரும்பியுள்ளார். கடந்த ஒரு வருடமாக தேங்காய் சிரட்டைகளை பக்குவப்படுத்தி தேனீர்கப், ஒயின்கப், அலங்காரப்பூ, குத்துவிளக்கு, அலங்கார வீடு முதலான பல பரிசு பொருட்களை உருவாக்கி விநியோகித்தும் வருகிறார். இதற்கு வானிஸ், பாலிஸ், டைல்ஸ் அறுக்கும் மிஷின், கடையும் இயந்திரம் கொண்டு மெருகேற்றி வருகிறார். இவருக்கு மனைவியும், 2 பிள்ளைகள் உள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூரில் கிப்ட் விநியோகிக்கும் கடை மூலம் தனது பொருட்களை விற்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.



சின்னத்தம்பி
பூவானி அருந்ததியர் காலனி 2 வது வார்டு
மீனாட்சிபுரம் அஞ்சல், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா
செல் : 9747665286

## தமிழ் மணியின் இயற்கை வேளாண்மை உத்திகள்



தமிழ்மணி (60) ஸ்ரீ வில்லிபுத்தூர் அருகேயுள்ள வைத்தியலிங்கபுரத்தில் வசித்து வருகிறார். இவர் விசைத்தறி வைத்து குடும்பம் நடத்தி வருகிறார். இவருக்கு வேளாண்மையில் ஆர்வம் ஏற்பட்டு நிலம் வாங்கி கடந்த 12 ஆண்டுகளாக தானியங்கள், காய்கறி பயிர் சாகுபடி செய்து வருகிறார். இத்துடன் மாட்டு பண்ணையும் வைத்துள்ளார். இவருடைய கிணற்றில் உப்பு நீராக உள்ளதால் மழைக்காலத்தில் மட்டும் (புரட்டாசி – தை வரை ) விவசாயம் செய்து வருகிறார். இவர் சுபாஷ் பாலேக்கரின் ஜீரோ பட்ஜெட் விவசாயத்தில் பயிற்சி பெற்று அதன்படி தன்னுடைய நிலத்திலும் கடைபிடித்து வருகிறார். இவர் கடைபிடிக்கும் சில உத்திகள் பின் வருமாறு:

**ஜீவாமிருதம்**

ஒரு பாத்திரத்தில் சாணம் (10 கிலோ), கோமியம் (10 லிட்டர்), வெல்லம் (2 கிலோ), கடலை மாவு (2 கிலோ) . கடலை மாவிற்கு பதில் சுண்டக் கடலை 2 கிலோ ஊறல் போட்டு முளைக்கட்ட வைத்து ஆட்டி ஊற்றிவிடலாம். இதனை 7 நாட்கள் வரை வைத்திருந்து 200 லிட்டர் நீரில் கலந்து ஓர் ஏக்கருக்கு வாய்க்கால் நீரில் கலந்து விட வேண்டும்.

**கனஜீவாமிருதம்**

சாணம் 50 கிலோ, வெல்லம் 2 கிலோ, பயறு மாவு 2 கிலோ தேவையான அளவு மாட்டுகோமியம் சேர்த்து உப்புமா பதத்திற்கு பிசைந்து உருண்டை செய்து காய வைக்க வேண்டும். இதனை மானாவரி நிலத்திற்கு மேலுரமாக இடலாம்.

**மீன் கரைசல்**

மீன்கழிவு 1 கிலோ, வெல்லம் 1 கிலோ சேர்த்து ஒரு பாத்திரத்தில் மூடி வைத்து விட வேண்டும். 1 மாதத்தில் இது நன்கு கரைந்து திரவமாகிவிடும். இதிலிருந்து 300 மி.லி எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்குத்

தெளிக்க வேண்டும். (இதனை 1 ஸ்பூன் அளவு காலையில் நாம் சாப்பிட்டு வர கண் நோய் தீரும்).

**மீன் எலுமிச்சை கரைசல்**

ஒரு பாட்டிலில் நாட்டு கோழி முட்டைகளை அடுக்கி அவை மூழ்குமாறு எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து விட வேண்டும். 10 முட்டைகளுக்கு சுமார் 1 கிலோ எலுமிச்சம் பழங்கள் தேவைப்படும். இத்துடன் 1/2 கிலோ வெல்லம் பாகு சேர்க்க வேண்டும். இதனை 30 நாட்கள் கழித்துப் பார்த்தால் முழுதும் கரைந்து கரைசலாயிருக்கும். இதிலிருந்து 300 மி.லி கரைசலை எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

(இந்த கரைசலை ஒரு ஸ்பூன் அளவு எடுத்து நாம் காலையில் பருகி வந்தால் இருமல், சளி, நுரையூரல் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும் என கூறுகிறார்).

**பஞ்சகவ்யா**

முதலில் பஞ்சகவ்யா தயார் செய்ய வேண்டும். 5 கிலோ சாணத்துடன் 1 கிலோ நெய் சேர்த்து பிசைந்து வைத்து விட வேண்டும். 3 நாட்கள் கழித்து இத்துடன் பால் 3 லிட்டர், தயிர் 3 லிட்டர், மாட்டு கோமியம் 3 லிட்டர், கரும்புசாறு 3 லிட்டர் அல்லது வெல்லம் 1 கிலோ சேர்த்து கலக்க வேண்டும். இதில் தேவைப்பட்டால் வாழைப்பழம், இளநீர் சேர்த்து கொள்ளலாம். 2 வாரங்களில் நன்கு புளித்து விடும். இதனை 2 நாட்களுக்கு ஒரு முறை கலக்கிவிட வேண்டும். இதிலிருந்து 200 மி.லி கரைசல் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு மேல் உரமாக தெளிக்கலாம். பஞ்சகவ்யாவை பல மாதங்கள் வைத்து உபயோகப்படுத்தி வரலாம்.

(பஞ்சகவ்யாவுடன் 4 முட்டை உடைத்து சேர்க்க வேண்டும். 11/2 கிலோ முளைக்க வைத்த 5 வகை பயறு வகைகள் ஆட்டி சேர்க்க வேண்டும். இத்துடன் அதிமதுரம் ஒரு சிட்டிகை, கடுக்காய் தூள் 100 கிராம், தேங்காய்பால் (2–3 தேங்காய் துருவியது) சேர்க்க வேண்டும். இந்த பஞ்சகவ்யாவை 30 நாட்கள் கழித்து மனிதர்கள் 10 மி.லி அளவு பருகி வந்தால் காய்ச்சல் , மலச்சிக்கல் போன்றவற்றிற்கு நிவாரணம் கிடைக்கும் எனக் கூறுகிறார்).

மதுரை கூடலரங்கத்தில் 24.9.2017 அன்று நடைபெற்ற இயற்கை வேளாண்மை கருத்தரங்கில் ஆற்றிய உரையில் இருந்து தொகுக்கப்பட்டது.

தமிழ்மணி
வைத்தியலிங்காபுரம்,ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம். செல் : 9245134568

## இயற்கை பயிர் ஊக்கி

கர்நாடகத்தில் மஞ்சுநாத் என்ற விவசாயி கீழ்கண்ட முறையில் மீன் கரைசல் தயார் செய்கிறார். கழிவு மீன் 1 கிலோ, தக்காளி பழம் 1 கிலோ, இளநீர் 1 லிட்டர், வெல்லம் 3 கிலோ. முதலில் மீனை பொடி பொடியாக நறுக்க வேண்டும். வெல்லத்தையும் தூளாக்க வேண்டும். தக்காளியை அறுத்து பிசைந்து விட வேண்டும். இத்துடன் இளநீர் சேர்க்க வேண்டும். இவற்றை ஒரு பிளாஸ்டிக் வாளியில் 30 நாட்கள் வைத்து விட வேண்டும். பின்னர் இதிலிருந்து 3–5 மி.லி எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். குரு அஸ்திரா என்று இதனை அழைக்கிறார். இதனை மண்ணிலும் அல்லது பயிரிலும் தெளிக்கலாம். இதனால் பயிர் வளர்ச்சி கூடும்.

Manjunath Holalu
Organic farming consultant
C/o. Razaki building, Vinayaka nagar
Savanur Road, Shiggaon - 681 205
Haveri, Kamataka
Cell - 9480330652

## பஞ்சகவ்யா அனுபவம்

நான் கடந்த 12 வருடங்களாக பஞ்சகவ்யா தயாரித்து பயிர்களுக்குத் தெளித்து வருகிறேன். கொடுமுடி நடராஜன் மூலமாக பழகிக் கொண்டேன். முதன் முதலில் 2004ல் இயற்கை வேளாண்மைக்கும் இரசாயன வேளாண்மைக்கும் உள்ள வித்தியாசங்களைப் பார்க்க ஒரு சோதனை செய்தேன். அதாவது பீட்ரூட் 2 ஏக்கரில் இரசாயன உரம் இட்டும், அடுத்த 2 ஏக்கரில் இயற்கை வேளாண்மை முறையிலும் வேளாண்மை செய்து பார்த்தேன். முதல் 30 நாட்களில் இரசாயன உரம் இட்ட பீட்ரூட் பயிர் நல்ல வளர்ச்சியுடன் திகழ்ந்தது. பின்னர் அறுவடை செய்ததில் இயற்கை வேளாண்மையில் 12 டன்களும் இரசாயன வேளாண்மையில் 171/2 டன் மகசூலும் கிடைத்தன. பஞ்சகவ்யாவை டாங்கிற்கு 300 மி.லி. அளவு பயன்படுத்தி தெளித்து வருகிறேன். மும்முறை தெளிக்கிறேன். இதனால் பயிரும் 15 நாட்களுக்கு முன்னரே அறுவடைக்கு தயாராகிறது.

(பஞ்சகவ்யா தயாரிக்கும் முறை 6ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது).

செல்வராஜ்
முக்கோணம், உடுமலைப்பேட்டை
திருப்பூர் மாவட்டம் , செல் : 9842270519

## பாரம்பரிய கால்நடை பாதுகாப்பு, கால்நடை மூலிகை வைத்திய கருத்தரங்கு

பாரம்பரிய நாட்டு இன கால்நடை பாதுகாப்பு மற்றும் கால்நடை மூலிகை வைத்திய கருத்தரங்கம் 23.09.2017 அன்று மதுரை தமுக்கம் கலையரங்கத்தில் மதுரை கூடலரங்கத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது. இந்த கருத்தரங்கை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மற்றும் சேவா ஏற்பாடு செய்தது. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதுரை தானம் அறக்கட்டளை அனைத்து சமூக அமைப்புகளை வைத்து கூடலரங்கம் தமுக்கம் மைதானத்தில் நடத்தி வருகிறது. இக்கருத்தரங்கத்தில் மதுரை மண்டல கால்நடை இணை இயக்குநர் டாக்டர். பாலசந்திரன் உட்பட 45 பேர் கலந்து கொண்டனர்.




முதலில் கால்நடைகளுக்கான மூலிகை வைத்திய பயிற்சி நடைபெற்றது. டாக்டர். அப்துல்ரசாக் கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களை பற்றியும் அதற்கான சிகிச்சை முறை பற்றியும், நோய் வராமல் எடுக்க வேண்டிய முன்னேற்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார். கால்நடைகளுக்கு வரும் நோய்களுக்கு மூலிகை வைத்தியம் செய்யும் முறையை திரு. விவேகானந்தன், செல்வி ஆகியோர் விளக்கினர். பல நோய்களுக்கு மருந்தாகத் தரப்படும் மசாலா உருண்டையை சகுந்தலா, செல்லம் தயார் செய்து காண்பித்தனர். மதிய உணவுக்கு பின் நாட்டு மாடுகளை (புலிக்குளம், உம்பளச்சேரி) வளர்க்கும் கிடைமாட்டுகாரர்களின் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

1. கிடைமாட்டுகாரர்கள் தங்களது மாடுகளை எந்த நேரத்திலும் எந்த கிராமத்திற்கும் மேய்ச்சலுக்கு ஓட்டி செல்ல அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும்.
2. எல்லா ஊர் கண்மாய்களிலும் கிடைமாடுகள் தங்கு தடையின்றி தண்ணீர் குடிக்க அரசு அனுமதி கொடுக்க வேண்டும்.
3. கிடைமாட்டுக்காரர்களுக்கு அடையாள அட்டை அரசு கொடுக்க வேண்டும்.
4. கண்மாயில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அரசு அகற்ற வேண்டும்.
5. கிடைமாடுகள் மற்றும் மந்தை ஆடுகள் நெடுஞ்சாலைகளை கடக்க குறிப்பிட்ட இடத்தில் அறிவிப்பு பலகையை அரசு வைக்க வேண்டும்.

மாலை 5 மணிக்கு கூட்டம் முடிவடைந்தது.

தொகுப்பு : ஜெயபாண்டி, சேவா

## சுப்ரமணியத்தின் இயற்கைவேளாண்மை

திரு. சுப்ரமணியன் (51) 7வதுவரை படித்துவிட்டு மேலக்குந்தை கிராமத்தில் வேளாண்மை செய்து வருகிறார். இவர் மல்லிகை, நெல்லி, விதை உற்பத்தி சாகுபடி செய்து வருகிறார். தற்சமயம் ஆள் பற்றாக்குறையினால் மல்லிகை சாகுபடியை நிறுத்தி விட்டார். இவர் பஞ்சகவ்யா தயாரிப்பு முறையை கொடுமுடி நடராஜன் கட்டுரையை விவசாய உலகத்தில் பார்த்து தெரிந்து கொண்டார். பின்னர் கொம்புசாண உரம், கொம்புசிலிகா உரம், மீன் அமினோ அமிலம், இயற்கைத் திறனுயிரி கரைசல், மண்புழு உரநீர் அமிர்த கரைசல் போன்றவற்றின் தயாரிப்பு முறைகளையும் தெரிந்து கொண்டு பயிர்களுக்கு சேர்த்தும், தனித்தனியாகவும் தெளித்து வருகிறார்.

வெண்டையில் மஞ்சள் நிறத்தில் பழுத்து காணப்படும் வைரஸ்நோய்க்கு நோய் வரும் முன்னர் பஞ்சகவ்யா தெளிப்பது சிறந்தது. மஞ்சளில் வரும் இலைப்புள்ளி நோய், கருகல்நோய்க்கு பஞ்சகவ்யாவுடன் சூடோமோனாஸ் சேர்ந்து தெளித்தால் நோய் கட்டுப்படும். 10 நாட்களுக்கு ஒரு முறை தொடர்ந்து பஞ்சகவ்யா தெளிக்க வேண்டும்.

(பஞ்சகவ்யா தயாரிப்பு முறை 6ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது).

சுப்பிரமணியம், மேலக்குந்தை
விக்கிரவாண்டி வழி, விழுப்புரம் – 605625
செல் : 9842397377

## குமாரின் போர்வெல் காற்று வெளியேற்றும் கருவி

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தாலுகா விழுந்தமாவடி மணல்மேடு கிராமத்தில் வசிப்பவர் திரு. எஸ்.குமார் (வயது 27). இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 1.5 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. இதில் மா மற்றும் காய்கறி சாகுபடி செய்து வருகிறார். இவர் போர்வெல் போடும் தொழில் செய்து வருகிறார். இவர் போர்வெல் பம்ப் காற்று வெளியேற்றும் கருவி ஒன்றை எளிய முறையில் வடிவமைத்துள்ளார்.

**போர்வெல் பம்ப் காற்று வெளியேற்றும் கருவி**



பொதுவாக போர்வெல் போடும்போது தண்ணீர் மட்டம் தெரிந்தவுடன் போர்வெல் செயல்பாட்டிற்கும் வரும்போது போர்வெல் பைப்பிலிருந்து காற்றை வெளியேற்றினால்தான் தண்ணீர் எடுக்க இயலும். ஆயில் என்ஜின் அல்லது மின்சார மோட்டாரை வைத்து இயக்க ஆரம்பித்தால் உள்ளே உள்ள காற்றை வெளியேற்ற முடியும். இதற்கு குறைந்தது 1/2 நாள் ஆகும். இச்சிரமத்தை போக்க சிறிது நேரத்தில் காற்றை வெளியேற்றி தண்ணீர் எடுக்க இவர் ஒரு சிறிய கருவியை வடிவமைத்துள்ளார். 3 இன்ச் விட்டம் 11/2 அடி உயரம் கொண்ட ஒரு PVC பைப் எடுத்துக் கொண்டு அதன் அடிப்பாகத்தை சுத்தமாக மூடி விட வேண்டும்.

பைப்பில் உள்ளே கை பம்புக்கு பயன்படும் ப்ளிஞ்சர் செட் மற்றும் ராடு கப் வாசருடன் உள்ளே விட்டு மேல் பகுதியை மூடிவிட வேண்டும். PVC பைப்பின் மேல் பகுதியில் தண்ணீர் வெளியேற மற்றும் காற்று வெளியேற ஒரு 1 இன்ச் விட்டம் அளவு துவாரம் விட்டுக் கொள்ள வேண்டும். PVC பைப்பின் கீழ் பகுதியில் 1 இன்ச் அளவுக்கு துவாரம் இட்டு அத்துடன் 1 இன்ச் அளவு விட்டம் 5 அடி நீளம் கொண்ட பிளாஸ்டிக் ஹோஸ் இணைக்க வேண்டும். PVC பைப்பின் அடியில் உள்ள பிளாஸ்டிக் ஹோஸை தண்ணீர் வெளியேறும் பைப்பின் உள்ளே விட்டு ரப்பர் பட்டை கொண்டு இறுக கட்டி விட வேண்டும். PVC பைப்பின் உள்ளே 1 லிட்டர் அளவு தண்ணீர் ஊற்றிக் கொள்ள வேண்டும். தற்போது மேலே உள்ள ராடை மேலும் கீழும் சைக்கிள் பம்ப் அடிப்பது போன்று செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செயல்படுத்தும் போது போர்வெல் பைப்பில் உள்ள காற்று வெளியேற்றப்படுகிறது. இதே போன்று 2 அல்லது 3 முறை செய்தால் போதும் போர்வெல் பைப்பில் உள்ள காற்று வெளியேற்றப்பட்டு தண்ணீர் வெளியே வந்து விடும். பின்பு இன்ஜின் அல்லது மோட்டாரை போட்டால் தண்ணீர் போர் வெல்லிலிருந்து வந்து கொண்டிருக்கும். இக்கருவியை பயன்படுத்தி 10–15 நிமிடத்தில் போர்வெல்லிலிருந்து தண்ணீரை எடுத்து விடலாம். இக்கருவி சிறிய அளவிலான 1 1/2'' பைப் மற்றும் 3'' பைப் போர்வெல்லுக்கு மட்டுமே பயன்படும். 30 அடி ஆழம் வரை உள்ள போர் வெல்லில் மட்டுமே பயன்படுத்தலாம். மேலும் உப்பு தண்ணீர் உள்ள பகுதிகளில் நல்ல தண்ணீர் உள்ள பகுதியிலிருந்து 600 அடி தூரம் வரை உள்ள 30அடி போர்வெல்லில் இருந்தும் தண்ணீர் எடுக்க பயன்படுத்தலாம்.

**பாதுகாப்பான குழந்தை நடை வண்டி**



குழந்தைகள் நடை பயிலும் குழந்தை நடை வண்டி பொதுவாக மரத்தால் செய்யப்பட்டு உபயோகத்தில் இருக்கும். ஆனால் இவர் 3/4 இன்ச் பி.வி.சி பைப் மற்றும் 5 இன்ச் விட்டம் கொண்ட காப்பர் வயர் சுத்தியருக்க உதவும் பிளாஸ்டிக் டிஸ்க் உதவியால் ஒரு எளிய பாதுகாப்பான குழந்தை நடை வண்டியை உருவாக்கியுள்ளார். மரத்தால் செய்யப்பட்ட குழந்தை நடை வண்டியின் விலை ரூ. 1500/– இரும்பில் ஆன குழந்தை நடை வண்டி ரூ. 1000/– ஆகும். ஆனால் இவர் உருவாக்கிய நடை வண்டியின் விலை ரூ. 200/– மட்டுமே மேலும் பழைய மாடல் குழந்தை நடை வண்டியில் முன் சக்கர அச்சு நேராக இருக்கும். இதனால் குழந்தைகளை நடை பயிலும் போது குழந்தை நடை வண்டி நேராக செல்வதால் நடை வண்டி ரோட்டுக்கோ அல்லது வீட்டை விட்டு வெளியிலோ சென்றுவிடும். அதனால் குழந்தை வண்டி ஓட்டும் போது

ஒருவர் அந்த குழந்தை பின்னே பாதுகாப்புக்காக செல்ல வேண்டியிருக்கும். ஆனால் இவர் உருவாக்கியுள்ள வண்டி குழந்தைக்கு பாதுகாப்புக்காக ஓர் ஆள் தேவை இல்லை. இவ்வண்டியில் முன் சக்கரம் அச்சு சற்று வளைந்து இருப்பதால் குழந்தை நாம் விட்ட இடத்திலேயே சுற்றி சுற்றி நடை வண்டி ஓட்டி விளையாடிக் கொண்டிருக்கும். இதனால் குழந்தை வீட்டை விட்டு இறங்கி விடுமோ அல்லது ரோட்டு மார்க்கத்துக்கு சென்று விடுமோ என்ற கவலை இல்லை. ஆகவே இது குழந்தைகளுக்கு பாதுகாப்பாகவும் விலையும் குறைவாக உள்ளது.

**பயிரை சேதப்படுத்தும் பறவைகள் விரட்டும் உத்தி**

சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்களை பறவைகள் வந்து உண்டு சேதப்படுத்தும் இதை தடுக்க இவர் ஓர் எளிய உத்தியை கையாண்டு வருகிறார். நான்கு புரி தென்னை நார் கயிற்றில் ஒரு அடி தூரத்துக்கு ஒரு வெடியை இணைத்து கயிற்றின் ஒரு முனையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு மறுமுனையை எரியூட்டி விட வேண்டும். அப்படி செய்தால் கயிறு புகைந்து கொண்டே வந்து ஒரு மணி நேரத்திற்கு பிறகு ஒரு வெடி வெடிக்கும். இவ்வாறு ஒரு மணி நேர இடைவெளியில் ஒரு வெடி வெடிக்கும். இதனால் பறவைகள் வந்தால் பறந்து ஓடி விடும்.

எஸ். குமார்
த/பெ. சுப்ரமணியன்,மணல்மேடு, விழுந்தமாவடி
கீழ்வேளூர் தாலுகா,நாகப்பட்டிணம் மாவட்டம் – 611112

## ஆவாரைக்கும் வரும் அபாயம்

சர்க்கரை நோய்க்கு பயன்படும் முக்கிய மூலிகை செடிகளில் ஆவாரம் பூவும் ஒன்று. ‘‘ஆவாரைக் கண்டால் சாவோர் உண்டோ’’ எனக்கூறுவதுண்டு. இந்த ஆவாரம் வறட்சி பகுதியில், தரிசுநிலங்களில் வளரும் தாவரமாகும். இதனை பொதுவாக ஆடு மாடுகள் கடிக்காது. ஆனால் மழைபெய்து புதிதாக தழையெடுக்கும் சமயம் இதில் பச்சை நிற புழுக்கள் மேய்ந்து செடியில் காம்பாக நிற்கும். எலுமிச்சம் பழக்கலரில் உள்ள வண்ணத்துப்பூச்சிகள் இடும் முட்டையிலிருந்து இந்தப்புழுக்கள் தோன்றி ஆவாரை இலைகளை உணவாகக் கொள்கின்றன. இப்புழுக்கள் செப்டம்பர் – அக்டோபர் மழைக்காலத்தில் தென்படுகின்றன. இதற்கு புலம்பெயர்ந்த எலுமிச்சை வண்ணத்துப்பூச்சி (Catopsilla pamona) என்றழைக்கப்படுகிறது. மஞ்சள் நிறத்தில் காணப்படும் பூக்களிலுள்ள தேனை தாய்பூச்சிகள் உணவாகக் கொள்ளும்.

## ஜல்லிக்கட்டுக்காக நாட்டுமாடு வளர்த்தல்



எங்கள் குடும்பத்தில் பல தலைமுறைகளாக மலைமாடு எனப்படும் நாட்டு மாடுகளை பராமரித்து வந்துள்ளோம். எங்கள் தொழுவில் 100 மாடுகள் இருக்கும். எருவை உரத்திற்கும் காளைகன்றுகளை உழவு மாட்டிற்கும் விற்று ஆதாயம் தேடி வந்தோம். எங்களுக்கு வனத்துறை கொடுத்த தொல்லையினால் மாடுகளை விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

தற்சமயம் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை நிதி உதவி மூலம் புலிக்குளம் மாடுகளை வாங்கி வளர்க்கிறோம். நல்ல கன்றுகளை ஜல்லிக்கட்டுக்காக கொடுப்பதால் ஆதாயம் வருகிறது. கிடைமாடுகளை மேய்க்க மேய்த்து வருபவருக்கு மாதச்சம்பளம் ரூ. 6000/– கொடுத்து வருகிறேன். தற்சமயம் மழை பெய்துள்ளதால் மேய்ச்சலுக்கு பிரச்சனை இல்லாமல் உள்ளது.

எங்கள் பகுதியில் நாட்டு மாடுகள் கலந்த கலப்பின பசுக்கள் உள்ளதால் எங்கள் ஊர் கூட்டுறவு பால் சொசைட்டியில் தயார் செய்யப்படும் ‘‘பால்கோவா’’ நல்ல ருசியாக இருக்கும். இதனை பல ஊர்களிலிருந்தும் வந்து வாங்கிச் செல்கின்றனர்.

ஏ. சுந்தரராஜன், ய. புதுப்பட்டி, திருவில்லிபுத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம், செல் : 9994071618

## சமைக்காத இயற்கை உணவு

எங்களுக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். ராகுலுக்கு 10 வயது. ராகவிக்கு 13 வயது. இவ்விருவருக்கும் பிறந்ததிலிருந்து இன்று வரை சமைக்காத இயற்கை உணவு (பழங்கள், காய்கறிகள்) மட்டும் கொடுத்து வளர்த்து வருகிறோம். நோய்க்கும் உணவே மருந்தாகும். இதுவரை எந்த மருத்துவமும் இப்பிள்ளைகளுக்கு தரப்படவில்லை. இவர்கள் ஆரோக்கியமாக திகழ்கிறார்கள். எங்கள் நல்வாழ்வு மையம் மூலம் இயற்கை வைத்தியம் செய்து வருகிறோம்.

நம்வாழ்வு பாண்டுரங்கன், நல்வாழ்வு மையம்
சிவனசவம், அம்பாசமுத்திரம் (வழி)
திருநெல்வேலி மாவட்டம், செல் : 9443043074

## மாரியப்பனின் இயற்கை வேளாண்மை

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் கோவில்பத்து கிராமத்தில் வசிப்பவர் திரு. மாரியப்பன். (வயது 56) . இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பில் செயற்குழு உறுப்பினராக உள்ளார். இவர் 2 ஏக்கர் நெல், 1/2 ஏக்கர் கடலை மற்றும் 1/4 ஏக்கர் மா சாகுபடியும் இயற்கை முறையில் செய்து வருகிறார்.



### நெல் சாகுபடி

நெல் சாகுபடிக்கு முதலில் அடிஉரமாக சாணி எரு 5 ஏக்கருக்கு 2 டன் வீகிதத்தில் இட வேண்டும். பின்பு நடவுக்கு முன்பு ஏக்கருக்கு 150 கிலோ என்ற விகிதத்தில் ஊட்டமேற்றிய தொழு உரமும் (தயாரிப்பு முறை 14ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது). மண்புழு உரம் ஏக்கருக்கு 500 கிலோ என்ற விகிதத்தில் இட வேண்டும். நடவுக்கு பின்பு 15 முதல் 20 நாட்களுக்குள் அதாவது பயிர் பச்சை பிடித்த பின்பு பஞ்சகவ்யா ஏக்கருக்கு 7 லிட்டர் என்ற விகிதத்தில் ஒரு டேங்கிற்கு 350 மி.லி பஞ்சகவ்யா தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும். பயிர் பூப்பதற்கு முன்பாக 3 முறை மேற்கண்ட விகிதத்தில் பஞ்சகவ்யா தெளிக்க வேண்டும். பின்பு பூச்சி தாக்குதல் இருந்தால் பூச்சி விரட்டி ஏக்கருக்கு 7 முதல் 10 டேங்க் என்ற விகிதத்தில் ஒரு டேங்கிற்கு (12 லிட்டர் டேங்க்) 600 மி.லி பூச்சிவிரட்டி தண்ணீருடன் கலந்து தொளிக்க வேண்டும். அதன் பின்பு பஞ்சகவ்யா 120 மி.லி / டேங்க், மீன் அமினோ அமிலம் – 120 மில்லி/ டேங்க், சூடேமோனஸ் – 120 மி.லி/ டேங்க் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். பூத்தபிறகு பூச்சி விரட்டி – 600 மி.லி / டேங்க், வேப்பஎண்ணெய் – 60 மி.லி / டேங்க், காதி சோப் கரைசல் – 50 மி.லி / டேங்க் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சி வராமல் இருக்க நெல் தரமாக இருக்க இஞ்சி பூண்டு, பச்சைமிளகாய் கரைசல் 400 மி.லி / டேங்க் என்ற விகிதத்தில் ஏக்கருக்கு 7 முதல் 10 டேங்க் தெளிக்க வேண்டும். மேற்கண்ட முறைப்படி இயற்கை வழியில் சாகுபடி செய்ததன் மூலம் ஏக்கருக்கு 2 1/2– 3 டன் நெல் மகசூல் எடுக்கிறார்.

### கடலை சாகுபடி

கடலைக்கு அடி உரமாக சாணி எரு ஏக்கருக்கு 2 டன் இட வேண்டும். பின்பு 15 ம் நாள் ஊட்டமேற்றிய தொழு உரம் – 200 கிலோ, மண்புழு உரம் 400 கிலோ கலந்து தெளிக்க வேண்டும். பின்பு 22 ம் நாள் அல்லது பூக்கும் நேரம் பஞ்சகவ்யா – 360 மி.லி/ டேங்க், மீன் அமினோ அமிலம் – 100 மி.லி / டேங்க் என்ற விகிதத்தில் கலந்து ஏக்கருக்கு 6 டேங்க் (12 லிட்டர் டேங்க்) தெளிக்க வேண்டும். பூ பூக்கும் நேரம் தண்ணீர் மாலை நேரத்தில் தான் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் மகரந்த சேர்க்கை நன்றாக நடைபெறும். மேலும் பூக்கள் அதிகம் உதிராது. பின்பு 40 ம் நாள் பஞ்சகவ்யா 360 மி.லி / டேங்க், பூச்சி விரட்டி – 600 மி.லி/ டேங்க், வேப்ப எண்ணெய் – 50 மி.லி / டேங்க், மண்ணெண்ணய் – 150 மி.லி / டேங்க் என்ற விகிதத்தில் கலந்து ஏக்கருக்கு 6 டேங்க் தெளிக்க வேண்டும். பின்பு 70 ம் நாள் மேற்கண்ட கலவையுடன் சூடோமேனஸ் 120 மி.லி / டேங்க் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். இதனால் இலைபுள்ளி, இலைகருகல் நோய் வராமல் இருக்கும். இம்முறையில் ஏக்கருக்கு 400 கிலோ கடலை மகசூல் கிடைக்கும்.

### மா சாகுபடி

மாங்காய் அறுவடை செய்த பின்பு மாமரம் இழந்த சத்தை மீட்டு எடுக்க 3லிட்டர் பஞ்சகவ்யாவை 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து மரத்தின் மீது தெளிக்க வேண்டும். மா, சீசன் ஆரம்பிக்கும் நேரம் மூலிகை பூச்சிவிரட்டி – 5 லிட்டர் / 100 லிட்டர் தண்ணீருக்கு, மா வளர்ச்சி ஊக்கி – 1 லிட்டர் / 100 லிட்டர் தண்ணீருக்கு, பஞ்சகவ்யா – 3 லிட்டர் / 100 லிட்டர் தண்ணீருக்கு, மீன் அமினோஅமிலம் – 1 லிட்டர் / 100 லிட்டர் தண்ணீருக்கு, என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும்.

**தேன் பூச்சி வராமல் இருக்க**

இஞ்சி பூண்டு பச்சைமிளகாய் கரைசல் – 11/4 கிலோ, வேப்பஎண்ணெய் – 300 மி.லி, காதி சோப்பு – 25 கிராம் ஆகியவற்றை கலந்து தெளிக்க வேண்டும்.

**மாங்காய் பெருக்க**

பஞ்சகவ்யா – 3 லிட்டர் / 100 லிட்டர் தண்ணீர், சூடோமோனஸ் 1 லிட்டர் / 100 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

**மா மர பசை**

சாணம்– 10 கிலோ, சாம்பல் – 5 கிலோ, கிளிஞ்சல்தூள் – 21/2 கிலோ, கல் உப்பு – 1 கிலோ, வேப்ப எண்ணெய் – 300 மி.லி, ஆனை நெருஞ்சி சாறு – 100 மி.லி (பேஸ்ட் பதம் வருவதற்கு) ஆகியவற்றை கலந்து மாமரத்திற்கு எட்டும் வரை தண்டு பகுதி மற்றும் கிளைகள் முழுவதும் தடவ வேண்டும். இது மாமரம் வறட்சி தாங்குவதற்கும் கவாத்து செய்து விடுவதற்கும் சமமான செயலாகும். இப்பசையை தென்னை மரத்திற்கும் பயன்படுத்தலாம்.

**ஊட்ட மேற்றிய தொழுஉரம் செய்முறை**

சாணம் – 700 கிலோ, கிளிஞ்சல் சுண்ணாம்பு – 40 கிலோ, வேப்பம் புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு, எள்ளு புண்ணாக்கு, இலுப்பை புண்ணாக்கு ஒவ்வொன்றும் 50 கிலோ, ஜீவாமிர்தம் – 100 லிட்டர், புற்று மண் – 100 கிலோ, நுண்ணுயிர் 6 வகை – 24 லிட்டர். மேற்கூறியவற்றை கலந்து மூடாக்கு போட்டு தினமும் தண்ணீர் தெளித்து வர வேண்டும். 25 முதல் 30 நாட்கள் பிறகு எடுத்து பயன்படுத்தலாம்.

கே. மாரியப்பன்
த/பெ. காளியப்பன், மன்மதன்கோவில் தெரு
கோவில்பத்து கிழக்கு – அஞ்சல்
வேட்டைகாரனிருப்பு – வழி, வேதாரண்யம் தாலுகா
நாகப்பட்டினம் மாவட்டம், செல் : 9443678808

## மாட்டு கழிச்சலுக்கு

பிலாஞ்சித்தழை (பழம்பாசி) – 3 கைப்பிடி, கேழ்வரகு மாவு – 100 கிராம், வெல்லம் – 50 கிராம். இலையை இடித்து மாவு, வெல்லம் இவற்றை பிசைந்து 3 உருண்டைகளாக செய்து ஒரு வேளை கொடுக்க வேண்டும். சரியாகிவிடும். மறுமுறை தேவைப்பட்டால் இதை போல் புதிதாக தயார் செய்து கொடுக்கலாம்.

திருமதி. முனியம்மாள்
தருமநீதி, காவேரிப்பாக்கம் வட்டம்
வேலூர் மாவட்டம் ,செல் : 9791502514

## களை எடுக்கும் கருவி

தெலுங்கானா மாநிலம் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள காடிவெண்டி மகிபால் சாரி என்பவர் கையால் இயக்க கூடிய 4 அல்லது 5 ஹெச்பி டீசல் என்ஜின் உதவியுடன் இயங்க கூடிய ஒரு எளிய களை எடுக்கும் இயந்திரத்தை வடிவமைத்துள்ளார்.



(இவர் 2015ம் ஆண்டு அக்கருவியை கண்டுபிடித்தமைக்கு தேசிய அளவில் பரிசு பெற்றுள்ளார்). இக்கருவி 22 அங்குலம் இடைவெளியில் பயிரிடப்பட்ட அனைத்து புஞ்சை பயிர்களிலும் களை எடுக்கவல்லது. இக்கருவியை இடது புறம் உள்ள ஆக்சிலேட்டர் உதவியுடன் இயக்கலாம். இக்கருவி ஒரு ஹெக்டேர் களை எடுக்க 3.5 லிட்டர் டீசல் தேவை. ஒரே நேரத்தில் இரண்டு வரிசைகளிலும் செயல்படுத்த வல்லது. இக்கருவியின் விலை ரூ. 31,000/– இதுவரை 500 கருவிகள் விற்பனை செய்துள்ளார்.

## நெல்லில் களை எடுக்கும் கருவி

திருந்திய நெல் சாகுபடி முறையில் களை எடுக்க சரியான களை எடுக்கும் கருவி இல்லாத நிலையில் 0.5 ஹெச்பி பெட்ரோல் என்ஜின் உதவியுடன் இயக்க கூடிய ஒரு எளிய களை எடுக்கும் கருவியையும் வடிவமைத்துள்ளார். இக்கருவி ஒரே நேரத்தில் இரண்டு வரிசைகளிலும் களை எடுக்க வல்லது. இக் கருவியை ஒரு சக்கரத்தின் உதவியால் எளிதில் திருப்ப இயலும். இந்த கருவியின் எடை மொத்தம் 20 கிலோ மட்டுமே. ஒரு ஏக்கர் களை எடுக்க 1 லிட்டர் பெட்ரோல் தேவைப்படுகிறது. இதன் விலை ரூ. 16,000/–.

மேற்கண்ட களை எடுக்கும் கருவிகளை

பெற்றுக்கொள்ள கீழ்க்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

Subhachandar ,67, Road no: 2
Vayupuri, Sainikpuri, Secunderabad - 500094
Cell : 9652801700

## கைத்தறியில் புட்டாபோடும் மெஷின்

சேலையில் பலவிதமான டிசைன்கள் போட கைத்தறியில் பல தடவை ஸ்டெப் வைக்க வேண்டும். உதாரணமாக 7 டிசைன் எண்ணிக்கைக்கு 7 தடவை ஸ்டெப் வைக்க வேண்டும். இதனை ஒரே தடவை தள்ளினால் 7 டிசைனிலும் கோர்த்துக் கொள்ளலாம். இதனால் வேலைப்பளு மிச்சமாகும். இதனை செய்ய தறிக்கு ரூ. 7,000 செலவு செய்து இந்த புட்டா நெசவிற்குப் பயன்படுத்தலாம். இந்த புதுமையை உருவாக்கிய அஸ்ஸாம் மாநில தீபக் என்ற நெசவாளர்க்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை மூலம் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

தீபக் பரளி, சுவால்குச்சி
அடபோய் கம்ரூப் , அஸ்ஸாம் – 781103
செல் : 9864294480
இமெயில் : bharalidipak@rediffmail.com

(திருவண்ணாமலை மாவட்டம் துருகம் கிராமத்தில் பானுமூர்த்தி தனது கைத்தறியில் இந்த புட்டா டிசைன் போடும் கருவியை சென்ற மாதம் இணைத்துள்ளார். இதனால் பல விதமான டிசைன்களை சேலையில் எளிதில் போட்டு முடிக்கலாம். – ஆசிரியர்)

## புல்லட் டிராக்டர்



புல்லட் மோட்டார் சைக்கிளிலிருந்து டிராக்டராக வடிவமைக்கப்பட்டுள்ளது. 3 சக்கரங்கள் டிராக்டர், பவர்டில்லரைவிட உருவத்தில் சிறியது. 1 லிட்டர் டீசலைக்கொண்டு ஒரு நாளில் (8 மணி நேரத்தில்) 8–12 ஏக்கர் வரை நிலத்தில் களையெடுத்தல், கிளறிவிடுதல் போன்ற பலவகையான வேலைகளைச் செய்யலாம். பயிர் இடைவெளிக்கேற்றவாறு பின்புறமுள்ள 2 சக்கரங்களின் இடைவெளியை கூட்டலாம் / குறைக்கலாம். இதனை மன்சுக்பாய் ஜகானி என்ற குஜராத் மாநில விவசாயி உருவாக்கியுள்ளார்.

Mansukhbhai Jagani
At- Meta Devaliya
Babara, Amreli - 365 410. Gujarat,
Cell - 9925447400

## மிளகு பிரித்தெடுக்கும் இயந்திரம்

கர்நாடகா மாநிலத்தில் சிக்மகளூர் மாவட்டத்தில் நரசிம்மபண்டாரி மிளகு மற்றும் பாக்கு பிரித்தெடுக்கும் இயந்திரங்களை உருவாக்கியுள்ளார். இதற்காக தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை இவருக்கு பரிசு வழங்கி உள்ளது. இந்த இயந்திரங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




**மாடல் 1**

இந்த இயந்திரம் சிறிய அளவில் பாக்குமரம் வளர்ப்போருக்கு உகந்தது. இந்த இயந்திரம் B சைஸ்

V– பெல்ட் மற்றும் 1/2 ஹெச்பி சிங்கிள் பேஸ் மோட்டாரால் இயக்க வல்லது. இது மணிக்கு 100 முதல் 150 கிலோ வரை மிளகு பிரித்தெடுக்கும். இதன் விலை ரூ. 19,900/–.

**மாடல் 2 :** இந்த இயந்திரம் B சைஸ் V– பெல்ட் மற்றும் 1 ஹெச்பி சிங்கிள் பேஸ் மோட்டாரால் இயக்க வல்லது. இது மணிக்கு 200 முதல் 250 கிலோ வரை மிளகு பிரித்தெடுக்கும். இதன் விலை ரூ. 25,000/–.

**மாடல் 3 :** இந்த மாடல் இயந்திரம் ஒரு மேம்பாடு செய்யப்பட்ட ஒரு இயந்திரமாகும். இது B சைஸ் V– பெல்ட், 1.5 ஹெச்பி சிங்கிள் பேஸ் அல்லது 3 பேஸ் மோட்டாரால் இயக்க வல்லது. இது மணிக்கு 400 முதல் 500 கிலோ வரை மிளகு பிரித்தெடுக்கும். இதன் விலை ரூ. 35,000/–.

**மாடல் 4 :** இந்த மாடல் இயந்திரம் திறன் மேம்பாடு செய்யப்பட்ட இயந்திரமாகும். இதுவும் B சைஸ் V– பெல்ட் மற்றும் 2 ஹெச்பி சிங்கிள் பேஸ் அல்லது 3 பேஸ் மோட்டாரால் இயக்க வல்லது. இது மணிக்கு 600 முதல் 700 கிலோ மிளகு பிரித்தெடுக்கும். இதன் விலை ரூ. 47,000/–.

**மாடல் 5 :** இந்த மாடல் இயந்திரம் திறன் மேம்பாடு செய்யப்பட்டது. இது B சைஸ் V– பெல்ட் மற்றும் 3 ஹெச்பி சிங்கிள் பேஸ் அல்லது 3 பேஸ் மோட்டாரால் இயக்க வல்லது. இது மணிக்கு 800 முதல் 900 கிலோ வரை மிளகு பிரித்தெடுக்கும். இதன் விலை ரூ. 55,000.

## பாக்கு பிரித்தெடுக்கும் இயந்திரம்

இந்த இயந்திரம் 1 ஹெச்பி. சிங்கிள் பேஸ் மோட்டாரால் இயக்க கூடியது. இது மணிக்கு 200 பாக்கு கொத்துகளை பிரித்தெடுக்கவல்லது. இந்த இயந்திரத்தை இயக்குவது மிகவும் சுலபம். இதன் விலை ரூ. 19,000/– (ஜி.எஸ்.டி வரி இல்லாமல்), (ரூ. 24,000/– ஜி.எஸ்.டி. வரியுடன்).

### மிளகு மற்றும் பாக்கு பறிக்க உதவும் ஏணி

இந்த ஏணி அலுமினியம் மற்றும் லேசான இரும்பு பைப்பால் ஆனது. இது 10, 20, 30 அடி உயரத்தில் உள்ளது. இதன் எடை குறைவாக இருப்பதால் இதனை எடுத்து செல்வது மிகவும் சுலபம். இது மிளகு மற்றும் பாக்கு பறிக்க உதவுகிறது.

Sri Durga Engineering Works
Vinoba Road, Bus stand
Koppa - 577126. Chikmagalur District
Karnataka. Cell : 9448530454

## புதிய விளக்குப்பொறி



பயிர்களைத் தாக்கும் புழுக்களின் தாய்பூச்சிகளை (அந்துப்பூச்சி, வண்ணத்துப்பூச்சிகள், தாய் வண்டுகளை) இரவில் விளக்குப் பொறி பொருத்தி கட்டுப்படுத்தலாம். திருச்சி, திரு. இலட்சுமணன் ( வயது 34) ஒரு புதிய விளக்குப் பொறியை வடிவமைத்துள்ளார். இதில் 4 வகையான பல்ப் வெளிச்சங்கள் வித்தியாசமான கதிர்வீச்சுகளை கொண்டிருக்கும். ஒவ்வொரு 1/2 மணி நேரத்திற்கும் இந்த வெளிச்சம் மாறும். இதனால் பல தரப்பட்ட பூச்சி இனங்கள் கவரப்பட்டு கட்டுப்படுத்தலாம். இரவில் 6 மணியிலிருந்து 11.30 மணி வரை எரிய விடுவதால் பின் இரவில் வரும் நன்மை செய்யும் பூச்சிகள் அழிக்கப்படாது. இது பேட்டரி மூலம் இயக்கப்படும். 12 வோல்ட் 20,000 ஆம்ஸ் திறன் கொண்டது. இந்த பேட்டரியை ஒரு தடவை சார்ஜ்செய்தால் 2 மாதங்கள் பயன்படுத்தலாம். இந்த விளக்குப் பொறியில் செல்போனையும் சார்ஜ் செய்யலாம். இந்த பேட்டரியை சூரிய சக்தி கொண்டும் சார்ஜ் செய்யலாம். இந்த விளக்கை எமர்ஜென்சி விளக்காகவும் பயன்படுத்தலாம்.

லட்சுமணன்
12/1, மாருதி நகர் முதல் குறுக்குத் தெரு,
கருமண்டபம், திருச்சி–1. செல் : 9750717777

## வீட்டு கழிவுநீரில் செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல்

வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் சமையல் கழிவு நீர், குளிக்கும் நீரை நேரிடையாக செடிகளுக்கும் பாய்ச்சும் சமயம் நீர் அதிகமாக ஊற்று எடுத்து வைக்கப்படும்

செடிகள், மரங்கள் அழுகி பட்டுவிட வாய்ப்புண்டு. இதற்கு கழிவு நீர் தொட்டி (சிறிய தொட்டி சுமார் 1–2 அடி நீளம், அகலம், ஆழம் கொண்டது) கட்டலாம். இதற்கு செங்கல் அல்லது கழிவு கிரானைட் கற்கள் வைத்து பூசி விடலாம். இதில் தேங்கும் நீரை சிறு வாளியில் நிரப்பி ஆங்காங்கே செடிகளுக்கு ஊற்றி விட்டால் நீர் தேங்கி மரம் அழுகும் சூழல் உருவாகாது.

எங்கள் வீட்டில் ஒரு தென்னை மரம் கழிவு நீர் தேக்கத்தால் அழுகிவிட்டது. தற்சமயம் இந்த தொட்டி கட்டிய பின் இது போன்ற பிரச்சனை இல்லை.

பெ. விவேகானந்தன், சேவா, மதுரை

## ஜமன்லால் பஜாஜ் விருது 2018

சிறந்த சமூக சேவகர்களுக்கு ஆண்டு தோறும் கீழ் கண்ட 4 பிரிவுகளில் பரிசுத் தொகை தலா ரூ. 10 லட்சம் வழங்கப்படுகிறது.

1) காந்திய வழியில் சமூகப்பணி ஆற்றுதல்.

2) அறிவியல் மூலம் கிராமப்புற முன்னேற்றத்திற்கு சேவை செய்தல்.

3) பெண்கள் மேம்பாடுக்காக சேவை செய்தல்.

4) வெளிநாட்டில் காந்திய வழியில் சேவை செய்தல்.

இந்த 2017 ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பிக் கடைசி தேதி 19.01.18. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். www.jamnalalbajajfoundation.org

மேலும் விவரங்களுக்கு

Jamnalal Bajaj Foundation
Bajaj Bhavan, Jamnalal Bajaj Marg,
226 Nariman Point , Mumbai - 400021
Phone : 022 2202 3626
Email-info@jamnalalbajajfoundation.org

## களர்நிலத்திற்கு பசுந்தாள் உரம்

கர்நாடக மாநிலம் தாவன்கரே மாவட்டத்தில் ஆஞ்சநேயர் என்ற விவசாயி களர்நிலத்தில் வளம் கூட்ட பயறுவகை விதைகளை விதைத்து பூக்கும் தருவாயில் மடக்கி உழுது விடுகிறார். இதற்கு பின் நெல் சாகுபடி மழைக்காலத்தில் துவங்கும். அதாவது நெல்பயிரிடும் முன்னர் இந்த பசுந்தாள் உரச்செடியை 45 நாட்களுக்கு முன்னர் விதைக்க வேண்டும். இவர் ஏக்கருக்கு 20–25 கிலோ பயறு விதைகளை கூட்டாகச் சேர்த்து விதைப்பு செய்கிறார். இதில் பாசிபயறு, உளுந்து, தட்டைப்பயறு, சணப்பு, தக்கைப்பூடு, நரிப்பயறு போன்றன அடங்கும். இது தவிர எள், நைஜர் போன்ற எண்ணெய் வித்து பயிர்களின் விதைகளையும் சேர்க்கிறார். இதனால் மண்ணிற்கு பல நுண்ணூட்ட சத்துக்கள் கிடைக்கலாம் என கூறுகிறார். இவர் தனது 4 ஏக்கர் நிலத்தில் பசுந்தாள் உரச்செடி வளர்த்தார். இவருடைய உத்தியால் மண்ணின் தரம் கூடி நெற்பயிர் நன்கு விளைந்தது. இதனைப் பார்த்து பல விவசாயிகள் கடந்த 5 ஆண்டுகளில் 1200 ஏக்கரில் இம்முறையைக் கடைபிடித்து வருகின்றனர். இது உற்பத்தி செலவை 20 சதம் வரை குறைத்துள்ளது. இரசாயன உர அளவையும் குறைத்துள்ளது. இதற்கு கர்நாடக மாநில வேளாண்துறையும் உதவியாயிருந்தது.

Manjunath Holalu
Organic farming consultant
C/o. Razaki building, Vinayaka nagar
Savanur Road, Shiggaon - 681 205
Haveri, Kamataka, Cell - 9480330652

தகவல்: லீசா இந்தியா –செப்டம்பர் 2016
தொகுப்பு : மஞ்சுநாத்

## கும்பகோணம் கார்த்திகேயனின் கண்டுபிடிப்புகள்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் வசிப்பவர் திரு. எஸ்.கார்த்திகேயன் (வயது 55). இவர் 10 ம் வகுப்பு வரை படித்தவர். இவருக்கு 2 மகன்கள் இருவரும் பொறியியல் பட்ட படிப்பு முடித்து விட்டு தனியார் கம்பெனிகளில் பணிபுரிந்து வருகின்றனர். இவர் கும்பகோணம் லால்பகதூர் சாஸ்திரி வீதியில் ஓம் சக்தி இண்டஸ்ட்ரீஸ் என்ற வேளாண் கருவிகள் வடிவமைக்கும் தொழிற்கூடம் வைத்து நடத்தி வருகிறார். இவர் இந்த தொழிற்கூடத்தை 1994ம் ஆண்டு முதல் நடத்தி வருகிறர். இவர் ஆரம்பத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் பழுதுபார்க்கும் வேலை செய்து வந்தார். பின்பு வேளாண் கருவிகள் வடிவமைக்க துவங்கினார் கடந்த 2006 ம் ஆண்டிலிருந்து வேளாண் கருவிகளை மட்டுமே வடிவமைத்து வருகிறார். இவர் பல்வேறுபட்ட வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு வடிவமைத்து உதவி வருகிறார். மேலும் இவர் பல புதிய கருவிகளையும் இவரே கண்டுபிடித்து வடிவமைத்துள்ளார். இவரது கண்டுபிடிப்புகளில் கோனோ வீடர், ஓம் சக்தி பவர் வீடர்,

செங்கல் அறுக்கும் இயந்திரம், விதை கரும்பு வெட்டும் கருவி, குழி உரம் இடும் கருவி, கரும்பு சோகை வெட்டும் கருவி என்பன இவரது முந்தைய கண்டுபிடிப்புகள். இவர் மேற்கண்ட கருவிகளை வடிவமைத்தற்காக சிருஷ்டி சன்மான் விருது, லோக ரத்னா விருது போன்ற பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். இவர் மேலும் பல்வேறு கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளார்.

**வரிசை நடவிற்கு அடையாளம் போடும் கருவி**



எட்டு அடி நீளம் 11/2 அடி விட்டம் கொண்ட கம்பியால் ஆன உருளையை ஒரு கம்பி வளையத்தால் ஒரு ஆள் இழுத்து செல்லும் விதமாக உருவாக்கியுள்ளார். அந்த எட்டு அடி நீள உருளையால் 25 செ.மீ X 45 செ.மீ போன்ற இடைவெளியில் நடவு குழி குறிக்கும் அளவுக்கு குழி போடும் கம்பி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கருவியின் உதவியால் ஓர் ஆள் இக்கருவியை இழுத்து செல்ல 2 நடவு ஆட்கள் அதன் பின்னால் நடவு செய்து கொண்டே செல்லும் அளவுக்கு எளிய முறையில் வடிவமைத்துள்ளார். இக்கருவியின் உதவியால் 3 நபர்கள் ஒரு நாளுக்கு 1–11/2 ஏக்கர் நடவு செய்ய இயலும். இக்கருவியை பயன்படுத்தி நடவு செய்ய நடவு வயல் சமமாக இருக்க வேண்டும். நடவு செய்யும் முதல் நாள் தண்ணீரை வடிகட்டிவிட வேண்டும். இதன் விலை ரூ. 2000/–.

**நெல் அவிக்கும் இயந்தரம்**

இவ்வியந்திரத்தில் ஒரே நேரத்தில் 90 கிலோ வரை நெல் அவிக்கலாம். இது நாக தகட்டால் ஆன 3 அடி உயரம் 2 அடி விட்டமுள்ள கொள்கலன் கொண்டது. அதன் உள்ளே 9 அடுக்காக நீராவி செல்லக் கூடிய குழாய்கள் உள்ளது. இவ்வியந்திரத்தில் கால் அளவு தண்ணீர் எடுத்து கொள்ள வேண்டும். பின்பு கொள்கலனில் உள்ளே 90 கிலோ அளவிற்கு நெல்லை கொட்ட வேண்டும். பின்பு இக்கலனை அடுப்பில் வைத்து எரியூட்ட வேண்டும். முதல் முறை நெல் அவிக்க 3/4 மணி நேரமாகும். அடுத்தடுத்து முறை நெல் அவிக்க 1/2 மணி நேரமாகும். இம்முறையில் நீராவி நெல்லுக்கு இடையிடையே குழாய் மூலம் செல்வதால் நெல் விரைவில் வேகிறது. நெல்லின் நிறம் அவித்த பின்பு நிறம் ஒரே மாதிரியா இருக்கும். நெல் சுத்தமாக அவிக்கப்படுகிறது. இதனால் அரிசி சுத்தமாகவும் தரமாகவும் கிடைக்கிறது. இதன் விலை ரூ. 7,500/–.

**பறவை விரட்டும் கருவி**



சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்களை பறவைகள் அதிகமாக வந்து சேதப்படுத்துகிறது. இவற்றை தவிர்க்க இவர் ஒரு பறவை விரட்டும் கருவி ஒன்றை வடிவமைத்துள்ளார். இக்கருவியில் 3 தகடுகள் கொண்ட விசிறி ஒன்று காற்று அடிக்கும் போது தானாக சுத்தும். அவ்விசிறியின் மறு முனையில் ஒரு இரும்பு கம்பி இணைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே ஒரு தட்டு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. காற்று அடிக்கும் போது விசிறி சுற்றும். இதனால் அச்சு முனையில்

இணைக்கப்பட்டுள்ள கம்பி சுத்தும் போது அக்கம்பி தட்டில் மணி அடிக்கிறது. இந்த தட்டின் ஓசையால் பறவைகள் பறந்தோடிவிடும். இதன் விலை ரூ. 1,200/–.

**சட்ட கலப்பை** (பரம்பு அடிக்க)

பொதுவாக மாடு வைத்து உழவு செய்யும் போது சட்ட கலப்பை மாட்டை கொண்டு இழுத்து செல்வது வழக்கம். இதனல் உழவு வயலில் உள்ள கட்டிகள் உடைக்கப்பட்டு நிலம் சமப்படுத்தப்படுகிறது. மேலும் வயலில் போடப்பட்ட தழை உர செடிகளை சேற்றில் அமுக்கி விட்டுவிடும். தற்போது மாடுகள் வைத்து உழவு செய்வது குறைந்து டிராக்டர், பவர்டில்லர் பயன்படுத்தி உழவு செய்யப்படுகிறது. இதனால் சட்டகலப்பை பயன்படுத்துவது குறைந்து விட்டது. இவர் பவர் டில்லர் பின்பு இணைத்து ஓட்டும் விதமாக சட்ட கலப்பை ஒன்றை வடிவமைத்துள்ளார். இக்கலப்பை 8 அடி நீளம் 1 அடி விட்டம் கொண்டது. இதனை பவர் டில்லருடன் இணைத்து ஓட்டும் போது நிலம் சமப்படுத்தப்படுவதுடன் தழை உர செடிகள் சேற்றில் அமுக்கப்படுகிறது. இதன் மூலம் 1 1/2 மணி நேரத்தில் ஒரு ஏக்கர் நிலத்தை தயார் செய்ய இயலும். இதன் விலை ரூ. 6,500/–.

**சீமை கருவேல் செடி பிடுங்கும் கருவி**



விவசாய நிலங்களில் சீமை கருவேல் செடிகள் விரைவில் முளைத்து நிலத்தை, வீணடிக்கிறது. இச்செடிகளை பிடுங்க இவர் ஒரு இரும்பால் ஆன கருவியை வடிவமைத்துள்ளார். இக்கருவியைக் கொண்டு 3/4 இன்ச் தடிமன் கொண்ட செடிகளை எளிதில் பிடுங்கலாம். இச் சிறிய செடிகளில் வேர் இரண்டு அடி ஆழம் வரை உள்ளதால் நம்மால் எளிதில் பிடுங்க இயலாது. இக்கருவி மூலம் எளிதில் இச் செடிகளை பிடுங்கி விடலாம். இதன் விலை ரூ. 1200/–.

எஸ். கார்த்திக்கேயன்
ஓம் சக்தி இண்டஸ்ட்ரீஸ்,
71/27, லால்பகதூர் சாஸ்த்ரி ரோடு,
கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.
செல் : 9789618131

## ராஜசேகரின் இயற்கை பாகல் சாகுபடி

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம் மல்லநத்தம் கிராமத்தில் ராஜசேகர் (வயது 33) விவசாயம் செய்து வருகிறார். இவர் பாகல் பயிருக்கு இயற்கை முறையில் உரமும் மருந்தும் பயன்படுத்துகிறார். பாகற்காய் பயிர் முளைத்ததும் ஒரு மாதத்திற்குள் உரம் வைக்க ஏக்கருக்கு 10கிலோ கடலை புண்ணாக்கை ஊற வைத்த கரைசலுடன் பசுஞ்சாணம் கரைத்து உரக்கரைசலாக செடிகளுக்கு இடுகிறார். 2வது மாதத்தில் 20கிலோ கடலைபிண்ணாக்கும், 3வது மாதத்தில் 30கிலோ கடலைப்பிண்ணாக்கும் 4வது மாதத்தில் 40கிலோ கடலைப்பிண்ணாக்கு பசுஞ்சாணத்துடன் கலந்து தர வேண்டும். ஒவ்வொரு தடவையும் வாய்க்கால் ஒன்றுக்கு 10 கிலோ பசுஞ்சாணத்தை கரைத்து விட வேண்டும். வேர்பூச்சிகளுக்கு வேப்பம்பிண்ணாக்கு கலந்து தர வேண்டும். பூச்சி நோய்களுக்கு காட்டாமணக்கு இலை, ஊமத்தை இலை, காய், சோற்றுக்கற்றாழை, வேப்பிலை ஒவ்வொன்றிலும் 1/2 கிலோ எடுத்து உரலில் இடித்து பின் மாட்டு கோமியம் 15 லிட்டரில் சேர்த்து 3 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இத்துடன் 250 கிராம் மஞ்சள் தூள், 1 கிலோ பசுஞ்சாணம் சேர்த்து 7 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இக்கரைசலை வடிகட்டி 10 லிட்டர் நீருக்கு 500 மி.லி. வீதம் பயிருக்கு தெளிக்க வேண்டும்.

**இஞ்சி பூண்டு கரைசல்**

இஞ்சி, பூண்டு, பச்சைமிளகாய் தலா 1 கிலோ எடுத்து விழுதாக அரைக்க வேண்டும். பின் ஒன்றாகச் சேர்த்து 10 லிட்டர் நீருக்கு 100 கிராம் கரைசலை சேர்த்து பாகை பயிருக்கு 15 நாட்களுக்கு ஒரு தடவை தெளித்தால் சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைப்புழு, காய்ப்புழுகள் கட்டுப்படும்.

பி. இராஜசேகர்
மல்லநத்தம், அரவக்குறிச்சி தாலுகா,
கரூர் மாவட்டம்
செல் : 7598199352

நன்றி : பசுமை விகடன்

## பாரம்பரிய கால்நடை இன பாதுகாப்போருக்கான பரிசு விழா




2016 ஆம் ஆண்டிற்கான பாரம்பரிய இன பாதுகாப்பிற்கான பரிசளிப்பு விழா 2017 ஆம் ஆண்டு மே மாதம் 21–22 தேதியில் ஹரியானா மாநிலம், கர்னாலில் உள்ள கால்நடை மரபியல் நிறுவனத்தில் நடைபெற்றது. கீழ்கண்ட முதல் 20 நபர்களுக்கு தலா ரூ. 10,000மும், சான்றிதழும் வழங்கப்பட்டன. 1.கரம்சந்த், ஹிமாசலபிரதேசம் – கட்டி ஆடு , 2. பிரஞ்வால் சந்திரகாந்த் கந்தல்கர், மஹாராஷ்டிரா – கவ்லோவ் மாடு , 3. ராகுல் கசினா, பஞ்சாப் – பீடல் ஆடு , 4. குடல ராம் தாஸ், ஆந்திர பிரதேசம் –புங்கனூர் மாடு, 5. சுனில் பஷாகிப் கரதே, மஹாராஷ்டிரா – கவ்லோவ் மாடு , 6. தபிஷவிஜ்ப தெபான்பா, குஜராத் – கஹாமி ஆடு , 7. முரளிதர் ரெட்டி, ஆந்திர பிரதேசம் – ஓங்கோல் மாடு, 8. சிவகுமார், கோயம்புத்தூர் – கோயம்புத்தூர் செம்மறி ஆடு, 9. ரானாபாய் கோவிந்த்பாய் பர்வத், குஜராத் – ஹலாரி கழுதை, 10. சண்முகம், சேலம் – சேலம் கருப்பாடு, 11. இராமசாமி, நாகப்பட்டினம் – உம்பளச்சேரி மாடு, 12. சிவண்ணா தம்பிடி, கர்நாடகா – ஆலம்பாடி மாடு, 13. நக்கு, அருணசலம் பிரதேசம் – அருணசல் யாக்மாடு, 14. ராமன்னா விட்டல் காஸ்தி, கர்நாடகா – முதோல் வேட்டை நாய், 15. தன்கமன் சுபா, மேற்கு வங்காளம் – சிரீ மாடு, 16. ரின்சின் செரிங், அருணசலப் பிரதேசம் – அருணசல் யாக்மாடு 17. மாதயன், ஈரோடு – பர்கூர் எருமை, 18. ரமேஷ், திரிச்சூர், கேரளா – வில்வதிரி மாடு, 19. பழனியம்மாள், கோயம்புத்தூர் – நாட்டு குறியாடு, 20. உதயகுமார், கர்நாடகா – சிட்டான் கோழி. இந்த பாரம்பரிய கால்நடை இன பாதுகாப்பு பரிசளிப்பு விழா மற்றும் கருத்தரங்கத்தை கால்நடை மரபியல் நிறுவனமும் (NBAGR) மதுரை சேவா நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்தன. கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்களுக்கான பல்லுயிர் பன்மய பாதுகாப்பு போஸ்டர் வடிவமைப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டோர் கர்நாலுக்கு அருகே உள்ள சுன்டலா பசு மடத்தை பார்வையிட்டனர். அங்குள்ள பசுமடத்தில் உள்ள பசுக்களை ஹரியானா மற்றும் சாஹிவால் இனங்களாக தரம் உயர்த்த கால்நடை மரபியல் நிறுவனம் செய்யும் பணிகள் குறித்து விளக்கி கூறப்பட்டது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு மூலிகை மசால் உருண்டை தயார் செய்யும் விதம் எடுத்து கூறப்பட்டது. இதை சேவா நிறுவன பணியாளர்கள் சகுந்தலா, ஜெயபாண்டி, சுவாமிநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். தேசிய பல்லுயிர் பன்மய வாரியம், சென்னை பரிசளிப்பு விழாவிற்கு நிதி உதவி செய்தது. பரிசு பெற்றவர்களின் விவரம் கீழ்காணும் இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். www.sevango.in

## பல்நோக்கு கருவி (கோடாரி, சுத்தியல், உளி)



முகமது ரபிக் ஆங்கர் வயது (42) தச்சு வேலை செய்து வருகிறார். இவர் கோடாரி மற்றும் சுத்தியல் இணைந்த ஒரு கருவி உருவாக்கியுள்ளார். இதற்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை மூலம் காப்பு உரிமை பெறப்பட்டுள்ளது. இதனால் ஒரு கூலி தொழிலாளி விவசாய தொழிலான மரம் வெட்டுதல், களை எடுத்தல், போன்ற வேலைகளை செய்யலாம். அதே சமயம் இதை உளியாகவும் பயன்படுத்தி தச்சு வேலை சம்பந்தப்பட்ட வேலைகளுக்கும் பயன்படுத்தலாம். இதனை திருப்புளியாகவும் ஆணிகளை கழற்றவும், சுத்தியலாகவும் பயன்படுத்தலாம். இதன் விலை ரூ. 1,500ஆகும்.

முகமது ரபிக் ஆங்கர், அனந்த்நாக், ஜம்முகாஷ்மீர் மாநிலம். மின்னஞ்சல் : giancelljk@gmail.com

## வாஸ்பேசின் வடிகட்டி



வாஸ்பேசின், சமையலறை கழுவும் தொட்டி, யூரினல்ஸ் போன்றவற்றிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பொதுவாக பைப் மூலம் கழிவு நீர் தொட்டிக்கு கொண்டு செல்லப்படும். கழிவு நீரில் கனமான பொருள்கள் கலந்திருந்தால் குழாய் அடைபடும் இதற்கு 'T' போன்ற ஒரு வடிகட்டியை பொருத்தினால் அன்னிய பொருள்கள் அடிப்பகுதியில் தங்கிவிட்டு தெளிந்த கழிவு நீர் மட்டும் செல்ல ஏதுவாகும். அடிப்பகுதியில் தேங்கும் கழிவுகளை இந்த வடிகட்டியை கழற்றி அகற்றி விடலாம். இதன் விலை ரூ. 150 ஆகும். இந்த வாஸ்பேசின் வடிகட்டியை திரு ஜோசப் உருவாக்கியுள்ளார்.



திரு. ஜோசப் தேன் துரைராஜ்

34/2, சேதுபதி ரோடு,

தூத்துக்குடி – 628002

செல் : 9487640263

## மஹாராஷ்டிராவில் மூலிகை மசால் உருண்டை



கிராம அளவில் பணியாற்றும் கால்நடை பராமரிப்பு பணியாளர்களுக்கு 2015ம் வருடம் 40 நபர்களுக்கு மூலிகை மசாலா உருண்டை தயார் செய்யும் பயிற்சி பிப்ரவரி மாதம் 18–19 நாட்களில் சேவா கிராமத்தில் கொடுக்கப்பட்டது. இது சேவா மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பயிற்சி எடுத்த பணியாளர்கள் மூலிகை மசாலா உருண்டை தயார் செய்து வெள்ளாடுகளுக்கு தத்தம் கிராமங்களில் கொடுத்து பார்த்தனர். சோலாப்பூர் மாவட்டத்தில் பார்சி வட்டாரத்தில் இதனுடைய பலனை பார்த்து பல ஊர்களில் கடைபிடித்து வருகின்றனர். மசால் உருண்டை கொடுக்கப்பட்ட ஆடுகள் நல்ல வளர்ச்சியுடன் எடை கூடியது. கழிச்சல் போன்ற நோய்கள் இல்லாமலிருந்தன. இதனை மனிதர்கள் சாப்பிட்டு பார்த்ததில் ஆஸ்துமா என்ற சுவாச நோய் நன்கு கட்டுப்பட்டதாக கூறுகின்றனர். வெள்ளாடு அறக்கட்டளை (The Goat Trust) இந்த கால்நடை மூலிகை வைத்திய பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. மசாலா உருண்டையின் முழு பயன்பாட்டை தெரிந்து கொள்ள வெள்ளாடு வளர்க்கும் கிராமங்களில் பயன்படுத்தியவர்களை பேட்டி காண அரசாங்கம் மூலம் ஏற்பாடு செய்யப்படும் என்று சோலாப்பூர் மாவட்ட மகளிர் மேம்பாட்டு மைய திட்ட அலுவலர் குருபாங்கி கூறுகிறார்.

திரு. குருபாங்கி, மாவட்ட திட்ட அலுவலர், சோலாப்பூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலகம், சோலாப்பூர், மகாராஷ்டிரா. செல்: 8888421666

## இக்னைட் 2018

### மாணவர்களுக்கான யோசனை, கண்டுபிடிப்புகளுக்கான பரிசு போட்டி

தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை (National Innovation Foundation ) என்பது மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையில் தன்னிச்சையாக செயல்படும் நிறுவனமாகும் . இக்னைட் என்ற போட்டியை தேசிய அளவில் மாணவர்களிடம் ஏற்படுத்தி மாணவர்களின் புதிய கண்டுபிடிக்கும் திறமையை வெளிக்கொணர ஊக்குவிக்கிறது. +2 வரை படிக்கும் எந்த பள்ளி வகுப்பு மாணவராக இருப்பினும் (17 வயதிற்கு உட்பட்டவர்கள்) இதில் கலந்து கொள்ளலாம். பள்ளி மாணவர்களின் சுயமான கண்டு பிடிப்புகள் அல்லது யோசனைகள் உத்திகளை வரவேற்கிறோம். இந்த கண்டுபிடிப்புகள் யோசனைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31–08–2018. கண்டுபிடிப்பு அல்லது யோசனையின் முழு விளக்கத்துடன் மாணவரின் பெயர், வயது, வகுப்பு, பள்ளியின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி எண் விவரங்களுடன் தபாலில் அல்லது மின்னஞ்சலில் அனுப்பவேண்டும். சிறந்த கண்டுபிடிப்புகள் முன்னாள் ஜனாதிபதி மாண்புமிகு டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளான 15–10–2018 அன்று அறிவிக்கப்படும். மிகச்சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பதிவுரிமையை மாணவர்களின் பெயரில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்படும். போட்டியைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும் சென்ற ஆண்டுகளில் யார் யார் எந்த கண்டுபிடிப்புகளுக்காக பரிசு பெற்றது பதிவுரிமை செய்யப்பட்டது போன்ற விபரம் அறிய **http://nif.org.in/ignite** என்ற இணையதளத்தைப் பார்க்கலாம்.

தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி :
National Innovation Foundation
Grambharti, Amrapur
Gandhinagar- Mahudi Road
Gandhinagar, Gujarat - 382650
Phone : 02764 261131/32/38/39
Fax : 011-43851803
Email : ignite@nifindia.org
Website : www.nif.org.in/ignite

## வாசகர் வட்டம்

### அத்திமரமும் சூரியனும்

எங்கள் தோட்டத்தில் அத்திமரம் ஒன்று உண்டு. இது வருடத்தில் 3 முறை காய்க்கும். அதாவது சூரியன் வடகோடிக்கு செல்லும்சமயம் (ஆடி), மத்தியில் (சித்திரை) தென்கோடியில் (தைமாதம்) சமயம் காய்ப்பது வியப்பாக உள்ளது. சூரியனுக்கும் மரத்திற்கும் உள்ள தொடர்பா?
கந்தராஜ்
51, மேலப்பொன்னகரகம், மதுரை. செல்: 9790127981

### வீட்டுத் தொட்டிகளில் தாமரைப்பூ

தாமரைப்பூ செடியிலிருந்து விதைகளை எடுத்து ஒரு சிமெண்ட் தொட்டியில் 1 1/2 அடி கனத்திற்கு களிமண் (ஈரமாக இருந்து கொண்டிருக்க வேண்டும்) பரப்பி நட வேண்டும். பின்னர் மாதம் ஒரு முறை சாணிப்பால் (சாணியை நீரில் கலந்து கொள கொளப்பாக) ஊற்றி வருவது நல்ல வளர்ச்சியைத்தரும். இந்த தொட்டி முழுவதும் பின்னர் நீர் நிரப்ப வேண்டும். மாதந்தோறும் பழைய நீரை வடித்துவிட்டு புதிய சாணிப்பால் திரவம், நீர் ஊற்றி வர வேண்டும்.
திரு. ஜெகந்நாதராஜா
இராஜபாளையம் நர்சரி கார்டன், 168, மதுரை ரோடு, இராஜபாளையம் – 626117. செல் : 9442057077

### மலை வேம்பு நாற்றுக்கள்

மலைவேம்பு நாற்றுக்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறோம். கன்றின் விலை ரூ. 6.
நாற்றங்கால் உரிமையாளர்: பஞ்சமூர்த்தி
வேகா கொல்லை, நெய்வேலி ஆர்ச் கேட் அருகில்
செல் : 9367631024

#### மலை வேம்பு மர சாகுபடி

எனது நிலத்தில் மலை வேம்பு பயிரிடலாம் என்ற யோசனை உள்ளது. அதனால் உங்களது உதவி தேவை. தயவு கூர்ந்து இது தொடர்பான வழிகாட்டுதல் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
அரோக்கியதாஸ், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம்
செல் : 9739748060
இந்திரா ராமநாதன்பதில்: கடந்த 10 ஆண்டுகளாக நான் மலைவேம்பு மர சாகுபடி செய்து வருகிறேன். நல்ல வைரம் உண்டாக வேண்டுமானால் 7–10 வருடங்களாவது

பொறுத்திருந்து வெட்ட வேண்டும். பேப்பர் மில்காரர்களுக்கு 3 வருடத்திலேயே வெட்டி விற்கிறோம். இன்றைய காலகட்டத்தில் நிலவி வரும் கூலியாட்கள் பற்றாக்குறைக்கு மலைவேம்பு பயிர் செய்வது சிறந்த வருமானம் தரும் உத்தியாக உள்ளது. ஒரு ஏக்கருக்கு 3 ஆண்டுகளில் 30 டன் எடுக்கலாம். ஒரு டன்னுக்கு ரூ.4,500 விலை கிடைக்கும். வெட்டுக்கூலி, கொண்டு செல்லும் செலவுக்கு ரூ.1500 கழித்து விட்டால் ரூ. 3,000 கிடைக்கும். நான் 60,000 மரக்கன்றுகளை எங்கள் தோட்டத்தில் நட்டுள்ளோம். தென்னை, காய்கறிப்பயிர் சாகுபடியை விட கையில் மொத்தமாக பணம் கிடைப்பதால் நல்ல உத்தியாக உள்ளது. மழைக்காலத்தில் நட்டால் தண்ணீர் குழிகளில் தேங்கி கன்று பட்டு விடும். எனவே மழைக்காலம் சென்றவுடன் டிசம்பர் – ஜனவரியில் நடுவது சிறந்தது. 2 அடி ஆழமான குழி எடுத்து அதில் எரு கலந்த மண் நிரப்பி கன்றுகளை நட வேண்டும். மரக்கன்றுகளை 10x10 அல்லது 15x15 அடி இடைவெளியில் நட வேண்டும். கன்றுகள் வளர்ந்த 3–6 மாதங்களில் (சுமார் 6 அடி உயரம் வரை வளர்ந்து விடும்) பக்க வாட்டு சிம்புகளை, மொட்டுக்களை கிள்ளி விட்டால் நேராக உயரமாக வளரும். 30 அடி வரை நேராக கொண்டு செல்லலாம். 15 நாட்களுக்கு ஒரு முறை கவாத்து செய்து வர வேண்டும். மலைவேம்பு மரத்தை மில்லில் பக்குவம் செய்யும் சமயம் பிளீச்சிங் செய்யத்தேவையில்லை. ஏனெனில் இதற்கு இயற்கயிலேயே நல்ல வெண்மை நிறம் கிடைத்துவிடும். ஆனால் சவுக்கு போன்ற மரங்களுக்கு பிளீச்சிங் செய்ய வேண்டும். இக்காரணத்தால் விவசாயிகளுக்கு மலைவேம்பு மரங்களுக்கு நல்ல விலை தர மில்காரர்கள் முன் வர வேண்டும். தேக்கு பாறைமண், கரடுமுரடான இடங்களில் செழிப்பாக வரும். ஆனால் மலைவேம்பிற்கு நல்ல மண் கண்டம் தேவை. நீர் பாய்ச்சி வளர்த்தால் நல்ல வளர்ச்சியை மலைவேம்பில் பார்க்கலாம். நீரில்லாமல் வறட்சியாயிருந்தால் மரத்தின் வளர்ச்சி மட்டும் தடைபடும். ஆனால் மரம் படாது. அதே சமயம் மரத்திற்கு தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக கரிசல் பூமியில் தண்ணீர் தேங்கிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் மரம் பட்டு விடும். ஈரோடு பகுதியில் பேப்பர்மில் இருப்பதால் சுற்றுவட்டாரங்களில் விவசாயிகளால் மலைவேம்பு பயிரிட விரும்பினால் மில்காரர்கள் மரக்கன்றுகள் ரூ. 6 க்கு வினியோக்கின்றனர்.

இந்திரா ராமநாதன், இராமு கவுண்டர் தோட்டம்
கள்ளிபட்டி, கணக்கன்பாளையம் அஞ்சல்
ஈரோடு மாவட்டம். செல் : 9360360989

## மானாவரி கரிசலில் இலுப்பை சாகுபடி

மானாவாரி கரிசல் நிலத்தில் இலுப்பை மரம் சாகுபடி செய்ய முடியுமா? – குருஜெகநாதன் சொக்கலிங்கபுரம், சாத்தூர் வழி விருநகர் மாவட்டம்.

மோகனகிருஷ்ணன் பதில் : கரிசலில் இலுப்பை வறட்சி தாங்கி வளரும். 7 வருடங்களில் காய்ப்புக்கு வரும். 10 வருடங்களான மரம் ஒன்றிலிருந்து 100 லிட்டர் எண்ணெய் எடுக்கலாம். வருடத்திற்கு ஒரு மரத்திலிருந்து குறைந்தது ரூ. 5000 வருமானம் கிடைக்கும். இதன் புண்ணாக்கு மாடுகளுக்கு அடர்தீவனமாக அளிக்கலாம்.

மோகனகிருஷ்ணன்,டி. களத்தூர், பெரம்பலூர் மாவட்டம்
செல் : 9894401680

## எல்லா விதைகளும் கிடைக்கும் இடம்

விவசாயிகளுக்கு தேவையான உளுந்து, தட்டைப்பயறு, பாசிபயறு, அவரை, கொளுஞ்சி, கொள்ளு, நரிபயறு, அகத்தி, கொளுக்கட்டைபுல், போன்ற அனைத்து விதைகளையும் தருவித்து கொடுக்கிறோம்.

திருநாவுக்கரசு, ஆறுமுகப்பண்டாரம்
சேலம் . செல் : 9443247822

## கடன் வாங்கி மழை பெய்ய வைத்தல்

1994ல் எங்கள் காக்கிவாடன்பட்டி கிராமத்தில் ஒரு விவசாயி ஐப்பசி மாதம் என்னிடம் வந்து பருத்தி காயோடும், பூவோடும் வாடுகின்றது. எப்போது மழை பெய்யும் என்று சுவாமியிடம் கேளுங்கள் என்று கூறினார். நான் சுவாமியிடம் எப்போது மழை பெய்யும் என்று கேட்கிறார்கள் என்றேன். அதற்கு சுவாமி இந்த வருடம் மழை பெய்யும் கட்டம் இல்லை. வேண்டுமென்றால் கடன்தான் வாங்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் கடன்வாங்கியாவது மழை பெய்ய வைக்கக்கூடாதா என்று சொன்னேன். பக்தவிஜயம் என்ற புத்தகத்தில் உள்ள பக்தர்களின் 13 கதைகள் படித்தாலும் போதும் என்று சுவாமி சொன்னார். நாங்கள் 82 பக்தர்களின் கதைகளை பங்குனி மாதமே படித்துவிட்டோம். சித்திரை மாதம் பிறந்தவுடன் மழை பெய்தது. இதனால் அந்த வருடம் பருத்தி வெள்ளாமை நன்றாக விளைந்தது.

லேட். கே.தவுடம்மாள்
காக்கிவாடன்பட்டி, சிவகாசி வழி

(பசு மடம் வைத்து பசுக்களை பராமரித்து வந்த திருமதி. தவுடம்மாள் 2016 ல் ஜுன் மாதம் காலமாகி விட்டார்கள். இவருடைய பசுபாதுகாப்பு, ஆன்மீக அனுபவங்கள் தொகுக்கப்பட்டு ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. தேவைப்படுவோர் ரூ. 30 ஐ சேவா, மதுரை அலுவலகத்திற்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்).

## ek;toa Ntshz;ikf;F rej;h tpguk;

| | tUl rej;h | MAs;rej;h |
|---|---|---|
| | &gha; | &gha; |
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள் / கம்பெனிகள் | 150 | 1500 |
| சமூக சேவா மையங்கள் | 130 | 1300 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 120 | 1200 |
| தனிப்பிரதி | 30 | --- |
| 14 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ.1200) + ( கொரியர் செலவு ரூ. 200 ) | 1400 | --- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா" மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடைகிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

**Ë™ Ü…ê™**

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

**ªðÁï˜**

------------------------------------

------------------------------------

------------------------------------

------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com